Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 110 சுபகிருது வருடம், கார்த்திகை மாதம் 07ஆம் திகதி புதன்கிழமை
(23.11.2022) ஹிஜ்ரி 1444, ரபிஉல் ஆகிர் - 28, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60

கமெண்ட் கந்தர்...

இலங்கைத் தீவையும் விற்று... இலங்கையை சுற்றியுள்ள தீவுகளையும் விற்று...






உஷ்

கொழும்புக்கு வந்த இந்திய உயர்மட்ட உளவுத்துறை அதிகாரி ஜனாதிபதி ரணிலை சந்தித்துவிட்டு பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷவையும் சந்தித்துள்ளாராம்.

இந்த இரண்டு சந்திப்புகளிலும் முக்கியமான விடயங்கள் பேசப்பட்டுள்ளதாகத் தகவல்.

# 113 தீவுகள் குத்தகைக்கு!

## சுற்றுலாத்துறையை மேம்படுத்த அரசு யோசனை

(நமது விசேட செய்தியாளர்)

சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் நாட்டை சூழவுள்ள 113 தீவுகளை குத்தகை அடிப்படையில் தனியாருக்கு வழங்குவதற்கு அரசு ஆலோசித்து வருகிறது.

இதற்கான அமைச்சரவைப் பத்திரமொன்றை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நேற்று முன்தினம் முன்வைத்துள்ளார்.

02 பக்கம்

## பட்ஜெட் இரண்டாம் வாசிப்பு பெரும்பான்மையுடன் நிறைவேறியது

(நா.தினுஷா)

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2023ஆம் நிதியாண்டுக்கான வரவு -செலவுத்திட்டத்தின் இராண்டாம் மதிப்பீடு 34 மேலதிக வாக்குகளால் நேற்று (22) நிறைவேறியது. வரவு- செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக 121 வாக்குகளும் எதிராக 84 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

2023ஆம் நிதியாண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தின் இரண்டாம் மதிப்பீடு கடந்த 14ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

02 பக்கம்

## மனிதக் கடத்தலில் ஈடுபட்டோரை கைதுசெய்ய விசேட நடவடிக்கை

### ஓமான் விவகாரம் குறித்து அமைச்சர் மனுஷ தகவல்

(நா.தினுஷா)

வெளிநாடு செல்லும் காரணத்தைக் குறிப்பிடாமல் பொய்க் காரணங்களைக் குறிப்பிட்டு, சுற்றுலா விசாவினூடாக சென்றவர்களாலேயே அச்சுறுத்தலுக்குள்ளாகும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஓமான் விவகாரத்தில் தொடர்புடைய...

02 பக்கம்

## பாடசாலைகளில் ஆசிரியர்களை தவறாக இயக்கும் தீய சக்திகள்

### அரசாங்கம் குற்றச்சாட்டு; போதைப்பொருள் பாவனைக்கும் அவ்வாறானவர்களே காரணம் எனவும் தெரிவிப்பு



(நா. தினுஷா)

நாட்டின் கலாசாரத்துக்கு பொருத்தமற்ற ஆடைகளை அணியுமாறு கோரும் தீய சக்திகள் பாடசாலைகளில் இயங்குவதாகவும் மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பயன்பாட்டுக்கு இவ்வாறானவர்களே காரணம் என தகவல் கிடைத்துள்ளதாகவும்...

02 பக்கம்

## சுற்றறிக்கைக்கு அமையவே ஆடைகளை அணிகின்றோம்

### ஆசிரியர் சங்கங்கள் அரசுக்கு பதிலடி

(கே.சுபானி)

அரச சுற்றுநிருபத்தின் பிரகாரமே ஆசிரியர்கள் இலகு ஆடைகளை அணிந்ததாக தெரிவித்துள்ள இலங்கை ஆசிரியர் சங்கம், மாணவர்களிடையே நிலவும் போசாக்கின்மை பிரச்சினையை மூடி மறைக்கவே ஆசிரியர்களின்...

02 பக்கம்

## ரெலிகொம் லைக்காவுக்கு விற்பனையா?

### மறுக்கிறார் நீதி அமைச்சர்

(நா.தினுஷா)

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தை, லைக்கா நிறுவனத்திடம் ஒப்படைப்பது தொடர்பில் எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்றும் நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்புக்கு உட்படுத்துவதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

02 பக்கம்

## கட்டணம் செலுத்தாது பெசில் எஸ்கேப்!

### விமான நிலையத்தில் உண்டு களித்த பின்னர் இரண்டகம்



(கட்டுநாயக்க செய்தியாளர்)

அமெரிக்காவிலிருந்து நாட்டுக்கு கடந்த ஞாயிற்றுக் கிழமை வருகை தந்த முன்னாள் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ பிரமுகர் சேவைகளைப் பயன்படுத்தியதற்கான கட்டணத்தையும், பிரமுகர் ஓய்வறையில் பிரம்மாண்ட...

02 பக்கம்

## அமைச்சரவை முடிவுகள்

05பக்கம்

## இந்தோனேஷிய நிலநடுக்கத்தில் பலியானோரின் எண்ணிக்கை 252

10 பக்கம்

## பட்ஜெட் தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சு

### மலையகப் பிரதிநிதிகளை கலந்துகொள்ளுமாறு ஜீவன் அழைப்பு

(ம.சுசிகலா)

வரவு - செலவுத்திட்டம் தொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலும் ஜனாதிபதியிடம் அது குறித்து தெரிவித்தேன். அடுத்த வாரம் ஒரு கலந்துரையாடலை அவர் ஏற்பாடு செய்துள்ளார். மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் அனைவரும் இதில் கலந்துகொள்வார்களென...

02 பக்கம்






# சிறைக்கைதிகளில் 80 வீதமானோர் போதைப்பொருளுக்கு அடிமை

*(நா. தினுஷா)*

சிறைச்சாலைகளில் இருக்கும் கைதிகளில் 80 சதவீதமானவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களாக இருப்பதாகவும் அவ்வாறில்லாவிட்டால் போதைப்பொருளுக்கு அடிமையாகி முன்னெடுக்கப்பட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களாக இருப்பதாகவும் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானத்தை அறிவிக்கும் நேற்றைய வாராந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு, அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும்போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

தற்போதுள்ள பொறிமுறைகளுக்கமைய போதைப்பொருள் கட்டுப்பாடு தொடர்பிலான அதிகாரங்கள் பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்புப் பிரிவினருக்கு இருக்கிறது. அது அவ்வாறிருந்தாலும் போதைப்பொருள் பயன்பாட்டைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதென்பது மிகவும் சவாலுக்குரிய விடயமாகவுள்ளது.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமை யாளவர்களின் பிரச்சினைகளே கடந்த காலங்களில் அதிகரித்துள்ளன. சிறைச்சாலை களில் 26 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் அதிகமானோர் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களே இருக்கிறார்கள்.

இந்தத் தொகையில் அண்ணளவாக பார்த்தால் 80 சதவீதமானவர்கள் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களே இருக்கிறார்கள். அவ்வாறில்லாவிட்டால், போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானதால் கொள்ளை, பாலியல் துஷ்பிரயோகம், கொலை போன்ற குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களாக இருக்கிறார்கள். இவற்றின் அடிப்படையை பார்த்தால் அபாயகரமான போதைப் பொருட்களே காரணமாக இருக்கின்றன.

## தூதரக சேவைகளுக்கான கட்டணங்கள் அதிகரிப்பு

தூதரக சேவைக் கட்டணங்களை எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதிமுதல் அமுலுக்கு வரும் வகையில் அதிகரிப்பதற்கு வெளிவிவகார அமைச்சு தீர்மானித்துள்ளது.

பரீட்சை சான்றிதழின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான கட்டணம் 500 ரூபாவிலிருந்து 800 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், வெளிநாட்டு பிரஜைகளுக்கு இலங்கை அரசாங்கம் வழங்கும் எந்தவொரு ஆவணத்தின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான கட்டணமும் 1,500 ரூபாவிலிருந்து 3,000 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# இரத்தினபுரியில் கண்டுபிடிக்கப்பட்ட மாணிக்கம் விற்பனையாகவில்லை

## டுபாய்க்கு கொண்டுசெல்ல நடவடிக்கை

*(ம. சுசிகலா)*



இரத்தினபுரியில் கடந்த வருடம் கண்டுபிடிக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய இயற்கை மாணிக்கக்கல் இதுவரை விற்பனை செய்யப்படவில்லையென இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையினர் தெரிவித்துள்ளனர்.

இது சுவிட்சர்லாந்திற்கு விற்பனைக்காக கொண்டுசெல்லப்பட்டிருந்த நிலையில், இதுவரை விற்பனை செய்யப்படாததால் டுபாய்க்கு கொண்டுசெல்லப்படவிருப்பதாக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை தெரிவித்துள்ளது.

503 கிலோ எடையுள்ள இந்த நீல மாணிக்கக் கல் உலகின் மிகப்பெரிய இயற்கை மாணிக்கக் கல் என கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளதாகவும் அதிகாரசபையின் தலைவர் விராஜ் டி சில்வா குறிப்பிட்டார்.

மேலும், இந்த மாணிக்கக்கல்லை இதுவரை யாரும் வாங்க முன்வராததால் அதை டுபாய்க்கு கொண்டுசெல்ல முடிவுசெய்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இது 2022 பெப்ரவரி 24ஆம் திகதியன்று சுவிட்சர்லாந்திலுள்ள ஆய்வகத்தால், உலகின் மிகப்பெரிய மாணிக்கக்கல்லாக அங்கீகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# புதிய வகை போதைப்பொருளுடன் களுபோவிலவில் சந்தேகநபர் கைது

*(கே. சுபானி)*

களுபோவில பிரதேச வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரூ. 80 இலட்சம் பெறுமதியான, அடையாளங்காண முடியாத போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கொழும்பு வடக்கு குற்றப்புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த சந்தேகநபரிடமிருந்து 78 ஆயிரத்து 600 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. கொழும்பு வடக்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் முகத்துவாரம் பிரதேசத்தில் 4 ஆயிரத்து 800 போதை மாத்திரைகளுடன் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் களுபோவில பிரதேச வீடொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த மேற்படி போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹெரோயின் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் அதற்குப் பதிலாக மேற்படி போதை மாத்திரைகளை பயன்படுத்துவதாக பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதன்போது கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடையவர் என்றும் மேலதிக விசாரணைகளுக்காக அவர் முகத்துவாரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## பட்ஜெட் இரண்டாம்...

அதன் மீதான விவாதம் தொடர்ந்து ஏழு நாட்கள் இடம்பெற்று நேற்றைய தினம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதேவேளை, ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் குழுநிலை மீதான விவாதம் நவம்பர் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதுடன், எதிர்வரும் டிசம்பர் மாதம் 08ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு மூன்றாவது மதிப்பீட்டுக்கான வாக்கெடுப்பு இடம்பெறும். இன்று முதல் டிசம்பர் 08ஆம் திகதி வரையான காலப் பகுதியில் ஞாயிறு மற்றும் போயா தினங்கள் தவிர கிழமையின் ஏனைய நாட்களில் நாடாளுமன்ற அமர்வு இடம்பெறும்.

வரவு-செலவுத்திட்ட விவாதம் நடைபெறும் காலப் பகுதியில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தை ஒதுக்காதிருக்க நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு தீர்மானித்துள்ளது. அடுத்த மாதம் 09ஆம் திகதி காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரையான காலப்பகுதியில் 50 வாய்மூல விடைக்கான கேள்விகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

வரவு-செலவுத்திட்ட விவாதம் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை இடம்பெறவிருப்பதுடன், மாலை 5.30 மணி முதல் மாலை 6.00 மணி வரையான நேரம் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை அல்லது சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

## மனித கடத்தலில்...

தூதரக அதிகாரி பணிநீக்கம் செய்யப்பட் டுள்ளதுடன், அவரை இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கை வந்ததும் அவரை கைதுசெய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார நாடாளுமன்றத்தில் நேற்று (22) தெரிவித்தார்.

இதேவேளை, அங்கு தங்கவைக்கப்பட்டுள்ள பெண்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதென்றால், ஒருவருக்கு 10 இலட்சம் ரூபா வீதம் செலவிட வேண்டி ஏற்படும். அதற்கான நிதியை செலவிடுவதற்கு அமைச்சரவை அனுமதியை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2023 ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான ஏழாவது நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமான் போன்ற நாடுகளில் விசா தொடர்பான நடைமுறைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதால், ஒருசில சந்தர்ப்பங்களில் அந்த நாடுகளில் தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பவர்கள், சுற்றுலா விசாவினூடாக வரும் பணியாளர்கள் அவர்களின் பணியிடத்துக்கு வந்ததும் குறித்த சுற்றுலா விசாவை தொழில்வாய்ப்புக்கான விசாவாக மாற்றி பணிகளுக்கு இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

எது எவ்வாறாயினும், ஒருசில வியாபார நோக்குடைய இடைத்தரகர்களை அடை யாளப்படுத்தாமல், சுற்றுலா விசாவை பயன்படுத்தி பெண்களை வெளிநாட்டு வேலை வாயப்புக்கு இணைத்துக்கொள்ளும் நடவடிக் கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அவ் வாறான பெண்கள் தொழில்வாய்ப்பு நிறுவனங் கள் அல்லது பயணம் சென்ற நாடுகளின் வேறு இடங்களில் காணாமல்போயுள்ளனர். அதன் பிரதிபலனாக அங்கு செல்லும் பெண் கள் பல்வேறு நெருக்கடிகளுக்கும் அச்சுறுத்தல் களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

ஒருசில பெண்களை முதலில் ஒரு நாட்டுக்கு அழைத்துச் சென்று பின்னர், நாடுகளுக்கிடையிலான எல்லை களினூடாக வேறு நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளமையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உதாரணமாக குறிப்பிடுவதானால், இலங்கையிலிருந்து அரபு இராச்சியத்துக்கு அழைத்துச் சென்று பின்னர் ஓமானுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தற்போது அந்த நாடுகளில் இருக்கும் இலங்கைத் தூதரகங்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் பாதுகாப்பு தங்குமிடங்களில் வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது ஓமானில் வேலைநாட்டு வேலை வாயப்புப் பணியகத்தில் பதிவுசெய்யப்பட்டு சென்ற பணியாளர்கள் 12 பேரும், சுற்றுலா விசாவை பயன்படுத்தி வேறு காரணங்களுக்காக செல்வதாக குறிப்பிட்டு இலங்கை விமான நிலையத்தை ஏமாற்றிச் சென்ற 65 பேர் உள்ளிட்ட 77 பேர் அந்த நாட்டின் பாதுகாப்பு இல்லத்தில் இருக்கிறார்கள். டுபாயில், வேலைவாய்ப்புப் பணியகத்தின் பதிவுடன் சென்ற 70 பேரும் சுற்றுலா விசாவினூடாக சென்ற ஏழு பேர் உள்ளிட்ட 77 பேர் இருக்கிறார்கள்.

பாதுகாப்பு விடுதிகளில் இருப்பவர்கள் மற்றும் முறைப்பாடுகள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாக பார்த்தால், அண்ணளவாக இரண்டாயிரம் பேர் வரையில் இருப்பதாக கணிப்பிட்டோம். ஆனால், தற்போது அந்த எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. சுற்றுலா விசாவினூடாக செல்பவர்களின் எண்ணிக்கையே தற்போது அதிகரித்துள்ளது.

உண்மையை கூறாமல் பொய்க் காரணங்களை குறிப்பிட்டு சுற்றுலா விசாவினூடாக வெளிநாடு சென்றவர்களால், அவர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கை எடுக்கும்போது பல்வேறு பிரச்சினைகளை சந்திக்க நேர்ந்துள்ளது. சுற்றுலா விசாவினூடாக சென்றவொரு நபர் விசாவின் காலம் முடிவடைந்ததுடன், நாளொன்றுக்கு 5 ஓமான் ரியாலை அந்த நாட்டுக்கு செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது. அதுமாத்திரமின்றி தண்டப்பணமும் செலுத்தவேண்டியுள்ளது. இவர்களை அழைத்து வரும்போது ஒரு நபருக்காக 10 இலட்சம் ரூபா வரையில் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வேறு காரணங்களுக்காக வெளிநாடு சென்றவர்களுக்காக நிதி செலவுசெய்யும் அதிகாரம் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு இல்லை. அதன் காரணமாக, பாதுகாப்பு விடுதிகளில் இருக்கும் பெண்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான விசாரணைகளை முன்னெடுத்து, சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கான அமைச்சரவை அனுமதியை பெற்றுக்கொண்டுள்ளோம். அதேபோன்று, அவர்களை அழைத்து வருவதற்கான நிதியை வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் செலுத்துவதற்கான அனுமதியையும் பெற்றுக்கொண்டுள்ளோம். சந்தேகநபர்களுக்கு எதிராக கடும் சட்டநடவடிக்கையும் எடுக்கப்படும்.

குற்றஞ்சாட்டப்பட்டு ஓமானிலுள்ள தூதுரக அதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவரை மீண்டும் நாட்டுக்கு அழைத்துவருவதற்கான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவர் இலங்கைக்கு வந்ததும் அவரை கைதுசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

## 113 தீவுகள்...

இவ்வாறு தீவுகளை தனியாருக்கு வழங்கு வதன்மூலம் அதனை அபிவிருத்திசெய்து சுற்றுலாப்பயணிகளை ஈர்த்தால் அரச வருமானம் அதிகரிக்கும். அதேசமயம், சுற்று லாத்துறையும் மேம்படுமென அமைச்சர் ரணதுங்க தனது பத்திரத்தில் சுட்டிக்காட்டி யுள்ளார்.

எவ்வாறாயினும் வடக்கு, கிழக்கு மாகாணங் களில் அதிகளவான தீவுகள் காணப்படுவதால் இந்த யோசனை தொடர்பில் மேலும் கவனத்தை செலுத்தவேண்டியுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையில் தெரிவித்ததையடுத்து இந்த விடயத்தை ஆராய குழுவொன்றை அமைக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அந்தக் குழுவின் அறிக்கையை பெற்றபின்னர் இந்த விடயத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

இலங்கையை சூழவுள்ள தீவுகளை அபி விருத்திசெய்ய சீனா கோரிக்கை விடுத் திருந்ததாக கடந்த காலங்களில் செய்திகள் வெளியாகியிருந்த நிலையில் மேற்படி யோசனை அமைச்சரவையிடம் முன்வைக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

## பட்ஜெட் தொடர்பில்...

எதிர்பார்க்கிறேன். எதிர்வரும் வியாழக் கிழமை திறைசேரியுடன் ஒரு கலந்துரை யாடலை ஏற்பாடு செய்துள்ளோம். அதில் தோட் டத் தொழிலாளர்களுக்கு எவ்வாறான பாதுகாப்பை வழங்க முடியுமென கலந்துரையாட வுள்ளோம். அதற்கு அடுத்த நாள் வெள்ளிக்கிழமை ஜனாதிபதியிடம் எமது நிலைப் பாட்டை எடுத்துரைப்போம் - என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் நேற்று (22) சபையில் தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஏழாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு மலையகத்தவராக இந்த வரவு-செலவுத் திட்டம் எனக்கு வருத்தத்தையே தருகிறது. அனைத்து மலையகப் பிரதிநிதிகள், மூத்த தலை வர்கள் பேசியதுபோல் எங்களுக்கு எந்த நிவா ரணமோ, பாதுகாப்பு வழிகளோ கிடையாது.

இது தொடர்பில் நாம் ஜனாதிபதியையும் சந்தித்துப் பேசியிருந்தோம். இந்தப் பொருளாதார நெருக்கடியான காலத்தில் நாட்டைக் கட்டியெழுப்ப ஆறு, ஏழு மாதங்கள் ஆகலாம். இந்த குறுகிய காலப்பகுதியில் நாட்டைக் கட்டியெழுப்ப முடியுமென ஜனாதி பதி நம்புகிறார். எங்களுக்கு இருக்கிற பயம் என்னவென்றால், அடுத்த ஆறு, ஏழு மாதங்கள் எங்கள் மக்கள் வாழவேண்டும். அவர் களுக்கு ஒரு பாதுகாப்பு இருக்க வேண்டும். ஒரு பாதுகாப்பு கவசமின்றி இந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது மிகவும் கடினம்.

உதாரணத்திற்கு கொரோனா காலப்பகுதியில் தோட்ட முகாமையாளருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டது. தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை. இதுபோல ஒவ்வொரு இடத்திலும் எங்களைப் புறக்கணித்துக் கொண்டே போனால் நாங்கள் இலங்கையரா என்று எங்களுக்கே சந்தேகமாக இருக்கிறது.

வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலும் ஜனாதிபதியிடம் நாம் தெரிவிக்கையில் அடுத்த வாரம் ஒரு கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளார். மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் அனைவரும் இதில் கலந்துகொள் வார்களென எதிர்பார்க்கிறேன். எதிர்வரும் வியாழக்கிழமை திறைசேரியுடன் ஒரு கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளோம். அதில் தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வாறான பாதுகாப்பை வழங்க முடியுமென கலந்துரை யாடவுள்ளோம். அதற்கு அடுத்த நாள் வெள்ளிக் கிழமை ஜனாதிபதியை சந்திக்கவுள்ளோம்.

பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் இந்த நாடு இந்த நிலைமைக்கு வந்திருக்கிறது. நேற்று கிளைபோசெட் மீதான தடை நீக்கப்பட்டதை நாம் வரவேற்கிறோம். அந்தத் தடையினால் வந்த பிரச்சினைகளை எம்மால் மாற்ற முடியாது. கிளைபோசெட் தடை காரணமாக கிட்டத் தட்ட 24 சதவீதமான தேயிலைத் தோட்டங்கள் வீழ்ச்சி யடைந்துள்ளன. அதனை சரிசெய்ய முடியாது என்றார்.

## சுற்றறிக்கைக்கு அமையவே...

ஆடை பிரச்சினையை அரசாங்கம் கையி லெடுப்பதாகவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் 'தமிழன்' நாளிதழுக்கு நேற்று (22) தெரிவித்தார்.

நாட்டின் கலாசாரத்துக்குப் பொருத்தமற்ற ஆடைகளை அணியுமாறு கோரும் தீய சக்திகள் பாடசாலைகளில் இயங்குவதாக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ முன்வைத்துள்ள குற்றச் சாட்டு தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

விஜயதாச ராஜபக்ஷ எவன்கார்ட் விவகாரத் துடன் தொடர்புடைய ஒருவர். அது எங்களுக்கு நன்றாகவே தெரியும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஆசிரியர்கள் தங்களின் ஆடைகளை கொள்வனவு செய்வதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர். ஆகவே, நாம் பொதுவாக 'ஆசிரியர்களுக்கு இலகு ஆடை' என்ற யோசனையை முன்வைத்தோம். ஆனால், அனைத்து ஆசியர்களும் இலகு ஆடைதான் அணியவேண்டுமென கட்டாயப்படுத்த வில்லை.

தற்போது மாணவர்களிடையே நிலவும் போசாக்கின்மை பிரச்சினையை மூடிமறைப்பதற் காக ஆசிரியர்களின் ஆடை பிரச்சினையை தூக்கிப்பிடித்துக்கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் நாடளாவிய ரீதியிலுள்ள பல பாடசாலைகளின் ஆசிரியர்கள் இலகு ஆடைகள் அணிந்து பாடசாலைகளுக்கு சமுகமளித்திருத்திருந்தனர்.

ஆசிரியைகள் சேலைக்குப் பதிலாக வேறு வசதியான ஆடைகளும், ஆசிரியர்கள் சிலர் சேர்ட்களுக்கு பதிலாக டீ-சேர்ட் அணிந்து பாடசாலை சென்றுள்ளனர். இதுகுறித்து ஜோசப் ஸ்டாலின் கருத்து தெரிவிக்கையில்,

எந்தவொரு ஆசிரியர் சங்கத்தினதும் அழுத்தத்தினால் ஆசிரியர்கள் குறித்த தீர்மானத்தை எடுக்கவில்லை. பொது நிர்வாகம் தொடர்பான 5/2022 சுற்றறிக்கையின் பிரகாரம் ஆசிரியர்களின் ஆடை உரிமைக்கு அமையவே இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர் - என்றார்.

இதேவேளை, நீதி அமைச்சர் விஜயதாச ராஜ பக்ஷவின் குற்றச்சாட்டு குறித்து இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப் 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவிக்கையில்,

நீதியமைச்சரின் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. அது அபாண்டமானது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் ஆசிரியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான ஆடைகளை கொள்வனவு செய்வதற்கு அவர்களின் மாதாந்த சம்பளம் போதுமானதாக இல்லை.

ஆகவே, கல்வியமைச்சு அவர்களுக்கான பொதுவான ஒரு சீருடை முறையை நடைமுறைப்படுத்த வேண்டும். அந்த சீருடையை கொள்வனவு செய்வதற்காக அவர்களுக்கு கொடுப்பனவுவொன்றையும் அரசாங்கம் வழங்கவேண்டும்'' - என்றார்.

## ரெலிகொம்...

நாரஹேன்பிட்டியிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (22) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் இது தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் வினவிய போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அமைச்சர் மேலும் கூறுகை யில், ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தை லைக்கா நிறுவனத்துக்கு வழங்குவது தொடர்பில் எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை. அதுதொடர்பில் கலந்துரையாடலும் இடம்பெறவில்லை. ஆனாலும், மாற்று யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது தொடர்பிலான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதுதொடர்பில் கலந்துரையாடல்களுக்கு தற்போது தயாராகி வருகிறோம் - என்றார்.

## பாடசாலைகளில்...

அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (22) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ இந்த விடயத்தை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆசிரியர்களின் ஆடை தொடர்பில் கல்வி அமைச்சர் தெளிவான அறிவித்தலை வெளியிட்டுள்ளார். எமது நாட்டின் அடையாளம் மற்றும் கலாசார அடையாளத்தைப் பாதுகாக்கும் வகையிலேயே ஆசிரியர் களுக்கான ஆடைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதற்கப்பால் ஆசிரியர்கள் தொடர்பில் மாணவர்களுக்கு இருக்கும் கௌரவத்தையும் பற்றையும் பாதுகாக்கும் வகையிலேயே ஆசிரியர்களுக்கான ஆடைகளின் தரம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனால், எமது நாட்டின் கலாசாரத்தை சீர்குலைக்கும் நோக்கில் அநேமான சக்திகள் இயங்கி வருகின்றன. அதிலொரு சக்தியே கலாசாரத்தை சீர்குலைக்க முயற்சித்து வருகின்றது. அதேபோன்றதொரு இன்னுமொரு தீய சக்தி பாடசாலைகளுக்குள் ஊடுருவி போதைப்பொருட்களை மாணவர்களுக்கு இலவசமாக பகிர்ந்தளித்து வருகின்றது. ஒருவேளை, ஆசிரியர்களின் ஆடை தொடர்பில் பேசும் குழுக்களுக்கும் மாணவர்களுக்கு போதைப்பொருள் பகிர்ந்தளிக்கும் விடயத்திலும் தொடர்பு இருக்கக்கூடும் என்று நம்புகிறேன்.

எதிர்கால சந்ததியினரை சீரழிக்கும் நோக்கில் பல்வேறு தீய சக்திகள் செயற்பட்டு வருகின்றன. இவர்களில் ஒருசிலருக்கு வேறு முறையில் அல்லது வெளிநாட்டு அரசுகள் மற்றும் அமைப்புகளினால் உதவிகள் கிடைப்பதாகவும் எங்களுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. எனவே, இவ்வாறான கலாசார சீரழிப்புகளினால் நாட்டை இலகுவாக கவிழத்துவிட முடியும்.

ஆகவே, இதுகுறித்து ஆர்ப்பாட்டங் களின்போதும் அல்லது வேறு வழிகளிலும் கூச்சலிடும் தொழிற்சங்கங்கள், கலாசாரம் என்றால் என்னவென்பதை கற்றுக்கொண்டு பின்னர் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை நாங்கள் ஒருபோதும் மீற மாட்டோம். ஒருசில தொழிற்சங்கங்கள் ஒரு தொழில்வாய்ப்பாகவே தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. அவற்றின் பிரதான கடமை நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்துவதாகும். - என்றார்.

## கட்டணம் செலுத்தாது...

வரவேற்பில் வந்த விருந்தினர்களுக்கு வழங்கப்பட்ட உணவுக்கான கட்டணத்தையும் செலுத்தாமல் அங்கிருந்து சென்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர் அமைச்சராகவோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினராகவோ இல்லாத நிலையில், விமான நிலையத்தின் பிரமுகர் ஓய்வறையைப் பயன்படுத்துவதற்கு அவருக்கு உரிமை இல்லை. மேலும் அவர்களில் பெரும்பாலானோர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் பிரதான தொழிற்சங்கம் குறிப்பிட்டது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் உணவுப் பிரிவுச் சேவை அதிகாரிகளை தொடர்பு கொண்டு கேட்டபோது, பெசில் ராஜபக்ஷவின் பிரம்மாண்ட வரவேற்பில் பிரமுகர் அறையில் உணவு வழங்கியதை உறுதிசெய்தனர். ஆனால், அவர்கள் அந்த உணவுக்கான கட்டணத்தைப் பெறவில்லையென தெரிவித்துள்ளனர்.

பெசில் ராஜபக்ஷ, விமான நிலையத்தில் தங்க நுழைவு வாயில் ஊடாக வருகைதந்திருந்தார். இந்த சேவையைப் பயன்படுத்துவதற்கு ஒரு நபருக்கு 200 அமெரிக்க டொலர்களுக்கு மேல் செலவாகும்.

பிரமுகர் ஓய்வுப் பகுதியில் இரண்டு அறைகள் உள்ளதாகவும், பெரமுனவை சேர்ந்த குறைந்தது 100 பேர் பெசிலை தங்க நுழைவாயில் சேவையில் கூடியிருந்ததாகவும், பிரமுகர்களுக்கான வாகனத் தரிப்பிடத்தைப் பயன்படுத்தியதாகவும் விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

பெசிலும், பரிவாரங்களும் விஜபி சேவையை பயன்படுத்தியதற்கு பணம் செலுத்த வில்லை. இதனால் அந்தப் பணத்தை யார் செலுத்து வார்கள் என்பதில் அதிகாரிகள் பெரும் சிக்கல் களை எதிர்நோக்கியுள்ளனர்.

# சந்திரிகா உள்ளிட்டோரின் உறுப்புரிமையை நீக்கி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதிரடி

## பொது நிலைப்பாட்டை மீறியதால் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அறிவிப்பு



(நமது நிருபர்)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டை மீறி செயற்பட்டதன் காரணமாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உள்ளிட்ட சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் கட்சி உறுப்புரிமையிலிருந்து இடைநீக்கப்பட்டுள்ளனர். அக்கட்சியின் மத்திய குழுக் கூட்டம் கொழும்பில் அமைந்துள்ள அதன் தலைமையகத்தில் இடம்பெற்றபோது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா உள்ளிட்ட அரசாங்கத்தில் பதவிகளை ஏற்றுக்கொண்டோரும் உறுப்புரிமையிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் அதன் பின்னர் ஏனைய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளராக செயற்பட்ட அமைச்சர் மஹிந்த அமரவீர அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டு திலங்க சுமதிபால நியமிக்கப்பட்டுள்ளார்.



### தவறிழைத்தோர் மீது கட்டாய நடவடிக்கை

#### சு.க. செயலாளர் தயாசிறி தெரிவிப்பு

கட்சியின் நிலைப்பாட்டுக்கு எதிராக செயற்படுவோர் மீது சிரேஷ்ட, கனிஷ்ட என்று தராதரம் பாராமல் கட்டாயம் நடவடிக்கை எடுக்கப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். அக்கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின்னர் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"கட்சியின் ஒழுக்கம் அனைவருக்குமானதாகும். எமது கட்சி பிளவுபட்டுள்ளதாக கூறப்படுவதில் எந்தவித உண்மையுமில்லை. எமது கட்சியைச் சேர்ந்த சிலர் தமது தனிப்பட்ட நலனுக்காக அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டுள்ளனர்" - இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கை சின்னத்தில் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதற்காக அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும் என திலங்க சுமதிபால இதன்போது கோரிக்கை விடுத்தார்.

### பதவி நீக்கம் தொடர்பில் அறிவிக்கப்படவில்லை

#### அமைச்சர் மஹிந்த அமரவீர



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் பதவியிருந்து நீக்கப்பட்டதாக ஊடகங்கள் வாயிலாகவே அறிந்தேன். அது தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லையென அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

முன்னணியின் செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"என்னை விட கட்சியை நேசிக்கும் ஒருவருக்கு பதவி வழங்கப்படுமாயின் அதனை நான் வரவேற்கிறேன். என்னை பதவியிருந்து நீக்குவதாயின் எமது முன்னணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளிடமிருந்தும் சம்மதத்தைப் பெற்றிருக்க வேண்டும். கட்சியின் செயலாளர் பதவியானது பதாகைகளுக்கும் கட்டடங்களுக்கும் மாத்திரம் மட்டுப்படுத்தி செயற்பட முடியாது என நான் எண்ணுகிறேன்" - இவ்வாறு அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# நூல்கள் வெளியீடும் பாராட்டு விழாவும்

## வரும் ஞாயிறு கண்டியில்

(இக்பால் அலி)

கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கம் மற்றும் தமிழ் வர்த்தக சங்கம் என்பன இணைந்து நடத்தும் தென்கிழக்குப் பல்லைக்கழக தமிழ் மொழித்துறை தலைவர் பேராசிரியர் கலாநிதி எம்.ஏ.எஸ்.எப்.ஸாதியா பௌஸர் எழுதிய "மலையகக் கவிதைகளில் மக்களும்" மற்றும் "மலையகக் கவிதைகளில் பெண்களும் சிறுவர்களும் " எனும் இருநூல்களின் வெளியீடும், அவர் அண்மையில் பேராசிரியராக பதவி உயர்வு பெற்றதைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் எதிர்வரும் 27-11-2022 அன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு கண்டி ஜின்னா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் மொழித்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் துரை மனோகரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர், பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் மொழித்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் எம்.ஏ.நுஹ்மான் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வின் முதல் அரங்கில் வரவேற்புரையை கண்டி தமிழ் வர்த்தக சங்கத் தலைவர் ஆர். அன்பழகன், வாழ்த்துரையை கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் என்.எம்.எம்.மன்சூர், தமிழ் வர்த்தக சங்கத்தின் முத்தையாப்பிள்ளை ஸ்ரீகாந்தன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். நூல் அறிமுகவுரையை கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் மொழித்துறை முன்னாள் தலைவர் செ.யோகராசா உரையாற்றவுள்ளார்.

இந்நிகழ்வில் இரண்டாவது அரங்கில் பாராட்டுரையை தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் மொழித்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா, ஏற்புரையை தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி எம்.ஏ.எஸ்.எப்.ஸாதியா பௌஸர், நன்றியுரையை கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கச் செயலாளர் ஏ.சி.எம்.ரஹ்மான் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். கண்டியில் முதன்முறையாக கண்டி தமிழ் வர்த்தக சங்கமும் கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கமும் இணைந்து இவ்விழாவை நடத்துவது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு எனக் குறிப்பிடலாம்.

# மீனவர்களுக்குத் தொடர்ச்சியாக மண்ணெண்ணெய் வழங்குவதை உறுதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை

மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் முறையாகவும் தொடர்ச்சியாகவும் விநியோகிப்பதை உறுதிசெய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜனாதிபதி பணிப்பாளர் நாயகம் (சமூக அலுவல்கள்) கீர்த்தி தென்னக்கோனால் 22 நவம்பர் 2022 திகதியிடப்பட்ட விசேட அறிவித்தல் கடிதத்தை மாவட்ட செயலாளர்கள், மாகாண கடற்றொழில் அமைச்சின் செயலாளர்கள் மற்றும் மாகாண கூட்டுறவு அமைச்சின் செயலாளர்களுக்கும் அனுப்பியுள்ளார்.

இதன்படி, மீனவர்களின் மண்ணெண்ணெய் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக தினமும் 50 எரிபொருள் பவுசர்களை விடுவிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மீனவர்களின் தேவைக்காக 357 மண்ணெண்ணெய் பவுசர்களை விடுவிக்க கடந்த வாரம் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அனுமதி வழங்கியிருந்தது. ஆனால், 206 பவுசர்களே (58 வீதம்) பெற்றோல் நிலையங்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. இதற்காக அரசாங்கம் 33 இலட்சம் டொலர்கள் மேலதிக செலவீனங்களைச் செய்த போதிலும் மீனவ மக்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் முறையாக மேற்கொள்ளப்படாததால் மீனவர்கள், மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பாகக் கருதப்படுவதுடன், இதன் மூலம் மக்களின் போசாக்குத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, மீனவர்களுக்குத் தேவையான எரிபொருளின் அளவு மற்றும் அதனைப் பெற்றுக்கொள்ள வேண்டிய பகுதிகளை தீர்மானிக்கும் பொறுப்பு, கடற்றொழில் திணைக்களம், கடற்றொழில் அமைச்சு மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண கடற்றொழில் அமைச்சுகள் மற்றும் மாகாண கூட்டுறவு அமைச்சுகளின் செயலாளர்கள், கடற்றொழில் திணைக்களம், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து, அனுமதிக்கப்பட்ட எல்லைக்குள் மீனவர்களுக்கு தேவையான மண்ணெண்ணையை வழங்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அதற்காக தனியார், கூட்டுறவு அல்லது அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் நிலையங்கள் ஊடாகவும் அல்லது கடற்படையினரின் உதவியுடன் மீனவர்களுக்கு தொடர்ந்து மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்படும் எனவும் குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கனடாவுக்கு அனுப்ப ரூ.99 இலட்சம் மோசடி

## யாழில் பெண்ணொருவர் கைவரிசை



இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பண்டத்தரிப்பு - வடலியடைப்பு பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் கனடாவுக்கு அனுப்புவதாக கூறி 99 இலட்சத்து 35 ஆயிரம் ரூபா மோசடி செய்ததாக நேற்று (22) மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.


மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சண்டிலிப்பாய் மற்றும் சங்கானை பகுதிகளைச் சேர்ந்த இருவரிடம் கனடாவிற்கு அனுப்புவதாக கூறி பெறப்பட்ட 55 இலட்சம் ரூபா மற்றும் 44 இலட்சத்து 35 ஆயிரம் ரூபா பணமே இவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு கடந்த சித்திரை மாதம் பணம் பெறப்பட்டதாக பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டில் 152 மருந்துகளுக்கு தொடர்ச்சியாக தட்டுப்பாடு

(கே.சுபானி)



இரண்டு வருடங்களுக்குத் தேவையான மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான முன்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளபோதிலும் நாட்டில் தற்போது 152 வகையான மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்தியா மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ள கடன் செயன்முறைகள் மூலம் மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நீண்டநெடிய செயன்முறைகளை பின்பற்ற வேண்டியுள்ளதால் இந்நெருக்கடிநிலை ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு சுட்டிகாட்டியுள்ளது. இது குறித்து சுகாதார இராஜாங்க அமைச்சின் மேலதிகச் செயலாளர் டொக்டர் எஸ்.ரத்நாயக்க தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது 152 வகையான மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. தற்போது இந்த மருந்துவகைகளை கொள்வனவு செய்வதற்கு இந்திய கடனுதவியையே பயன்படுத்தி வருகின்றோம்.

இந்திய கடனுதவியை பயன்படுத்த வேண்டுமாயின் திறைசேரி மற்றும் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் அனுமதி பெறவேண்டியுள்ளது. இந்த செயன் முறை மிக நீளமானது. இதனை சில தனியார் விநியோகஸ்தர்கள் பயன்படுத்த விரும்பவில்லை.

இதேவேளை, ஆசிய அபிவிருத்தி வங்கி 66.6 மில்லியன் டொலர் கடனு தவியை வழங்கியுள்ளது. இதனை பயன் படுத்த வேண்டுமாயின் மேற்குறித்த செயன் முறையையே பின்பற்ற வேண்டியுள்ளது.

இருப்பினும், உலக வங்கி வழங்கிய 23 மில்லியன் டொலர் கடன் உதவியினூடாக தேவையான இரண்டு மருந்துகள் தவிர்ந்த ஏனைய அனைத்து மருந்து வகைகளும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இதன்மூலம் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு மருந்து தட்டுப்பாட்டை சமாளிக்க முடியும் என்றார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் எம்பிலிப்பிட்டிய மாவட்ட வைத்தியசாலை உட்பட நாட்டின் பல்வேறு வைத்தியசாலைகளில் சத்திர சிகிச்சை அறைகள் மற்றும் பரிசோதனை உபகரணங்களின் தொழிற்பாடின்மை குறித்து வினவியபோது,

சேவை வழங்குனர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கட்டணங்கள் நிலுவையிலுள்ளன. அவர்கள் தங்களுக்கான கொடுப்பனவை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது சில வங்கிகள் சுகாதாரத் துறைக்கு கடன்கள் வழங்குவதில்லை. கடன் தொடர்பிலான கோரிக்கை கடிதங்கள் திறக்கப் படுவதில்லை. சுகாதாரத்துறைக்கு எப்போது நிதி கிடைக்குமென எங்களுக்குத் தெரியாது. விநியோகத்தர்களுக்கான நிலுவைத் தொகையை வழங்கினால் விரைவில் இப்பிரச்சினைக்காக தீர்வு கிடைக்கப்பெறும்.

நாடு தற்போது கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளது. இந்நிலையில், கடந்த சில மாதங்களாக மருந்துகள் மற்றும் இதர மருத்துவப் பொருட்களை இறக்குமதி செய்வதற்குத் தேவையான அமெரிக்க டொலர்களை திரட்டுவது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சிரமப்படுகின்றனர்.

பல நிறுவனங்கள் மற்றும் நாடுகளின் மானியங்கள், நன்கொடைகளால் நிலைமை ஓரளவு சீர்செய்யப்பட்டாலும், வைத்தியசாலைகளில் இன்னும் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் பற்றாக்குறை நீடிக்கிறது.

எனினும், மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் தட்டுப்பாடு பாரியளவில் இல்லை எனவும், சிகிச்சையை வழங்குவதை நிர்வகிக்க முடியும் எனவும் சுகாதார அமைச்சு அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் பெசிலை சந்தித்தமை அநீதியானது

## ஆணைக்குழுக்களுக்கு விரைவில் புதிய தலைவர்கள் நியமனம் என நீதி அமைச்சர் அறிவிப்பு

(நா. தினுஷா)

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட ஏனைய சகல ஆணைக் குழுக்களுக்கும் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் வெகு விரைவியில் நியமிக்கப்படுவார்கள் என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாராஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (22) இடம்பெற்ற, அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் இதுதொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

முன்னாள் அமைச்சர் பெசில் ராஜபக்ஷ அமெரிக்காவிலிருந்து நேற்று முன்தினம் நாடு திரும்பியிருந்தார். இந்நிலையில், பெரும் எண்ணிக்கையிலான ஆளுந்தரப்பு எம்.பிக்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில்



வைத்து சந்தித்திருந்தனர். இதன்போது பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் சந்திரா பெர்னாண்டோ மற்றும் அந்த ஆணைக்குழுவின் உறுப்பினர் எம்.பி.பெரேரா ஆகியோரும் அங்கு சென்று பெசிலை சந்தித்திருந்தமை எந்த வகையில் நியாயம் என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர்,

"21ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினூடாக இரட்டைக் குடியுரிமை உள்ள அரசியல்வாதிகள் அரசியலில் ஈடுப்படுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறானதொரு நிலையில், சுயாதீன ஆணைக்குழுவின் தலைவரும் உறுப்பினரும் பெசிலை சென்று சந்தித்தமை அநீதியாகும். இது ஜனநாயகத்துக்கு முரணான செயற்பாடு என்று பல்வேறு தரப்பினரும் குற்றச் சாட்டுகளை முன்வைத்து வருகின்றார்கள்.

நாட்டில் சுயாதீனத் தன்மையை உருவாக்க வேண்டும் என்பதற்காகவே 21ஆவது அரசியலமைப்பு திருத்தம் நிறைவேற்றப்பட்டது. சுயதீனமான அரச நிர்வாகத்தையும், சுயாதீன நிர்வாக தலைவர்களை உருவாக்கவே இதனூடாக எதிர்பார்க்கிறோம். மேலும், ஆணைக்குழுக்களை சுயாதீனப்படுத்துவதே இதன் பிரதான நோக்கம்.

எனவே, சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு புதிய நபர்களையும் சுயாதீனமான ஆணைக்குழு தலைவர்களையும் நியமிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறோம். எனவே, வெகு விரைவில் தேசிய பொலிஸ் ஆணைக்குழு உள்ளிட்ட சகல ஆணைக்குழுக்களுக்கும் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள்" என்றார்.



ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள டி.எஸ்.சேனநாயக்க அரசியல் கல்வி நிலையத்தின் பிரதித் தலைவராக கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தி, கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாசவினால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நியமிக்கப்பட்டுள்ளார்.

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, நவம்பர் 23ஆம் திகதி, புதன்கிழமை


# கொரோனா...
## வெள்ளம் வரும் முன்னர்...

மீண்டும் தீவிரமடையும் கொவிட் தொற்று அச்சத்தால், தெற்கு சீனப் பெருநகரமான குவாங்சோ அதன் மிகப்பெரிய மாவட்டத்திற்கு முடக்கநிலையை அறிவித்துள்ளது.

ஏறக்குறைய 19 மில்லியன் மக்கள் வசிக்கும் தெற்கு பெருநகரமான குவாங்சோ, நேற்றுமுன்தினம் அதிக மக்கள் தொகைகொண்ட பையூன் மாவட்டத்திற்கு ஐந்து நாட்கள் முடக்கநிலையை அறிவித்துள்ளது.

இந்த மாவட்டம், பொது போக்குவரத்தை இடைநிறுத்தியது. அத்துடன், குடியிருப்பாளர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற விரும்பினால் எதிர்மறையான சோதனையை முன்வைக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளது.

கொரோனாவுக்கு அடுத்தடுத்து 2 பேர் பலியானதையடுத்து, சீனாவில் மீண்டும் கட்டுப்பாடுகள் வந்துள்ளன. அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளதால் ஊழியர்கள் வீடுகளிலிருந்து பணியாற்றுமாறு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. பெரும்பாலான பகுதிகளில் பாடசாலைகள் மூடப்பட்டதால் மாணவர்களுக்கு இணையம் மூலம் வகுப்பு நடத்தப்படுகிறது.

சீனாவின் வூஹான் நகரத்தில் கடந்த 2019ஆம் ஆண்டு கடைசியில் முதன்முதலில் கொரோனா நோய் கண்டறியப்பட்டது. அதன்பிறகு இலங்கை உட்பட உலகம் முழுவதும் இந்தத் தொற்று வேகமாகப் பரவியது. இதனால் இலட்சக்கணக்கான பொதுமக்கள் உயிரிழந்தனர். சுமார் 2 ஆண்டு காலத்துக்கும் மேலாக உலகத்தை ஆட்டிப்படைத்த கொரோனா நோய் படிப்படியாகக் குறைந்து பொதுமக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பினாலும் இன்னும் தொற்று முடிவுக்கு வரவில்லை.

சீனாவில் கொரோனாவை கட்டுப்படுத்த தடுப்பூசி, தனிமைப்படுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் மீண்டும் கொரோனா பரவல் அதிகரித்தவண்ணம் உள்ளது. இதனால் பொதுமக்கள் பீதியடைந்துள்ளனர். கடந்த மே மாதத்துக்குப் பிறகு கொரோனா பலி இல்லாமல் இருந்தது. இந்நிலையில், 6 மாதங்களுக்குப் பிறகு நேற்றுமுன்தினம் முதன் முறையாக தலைநகர் பீஜிங்கில் கொரோனாவுக்கு 87 வயது முதியவர் இறந்தார். இதன் தொடர்ச்சியாக கொரோனாவால் பாதிக்கப்பட்ட 91 வயதுப் பெண் ஒருவரும் உயிரிழந்துவிட்டார்.

ஒரே நாளில் கொரோனாவால் 24,215 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பீஜிங், ஷாங்காய் உள்ளிட்ட நகரங்களில் ஏராளமானவர்களுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. கொரோனா மீண்டும் வேகமெடுக்கத் தொடங்கிவிட்டதாலும் அடுத்தடுத்து 2 பேர் பலியாகிவிட்டதாலும் பீஜிங்கில் மறுபடியும் கடுமையான கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகளான வணிக வளாகங்கள், கடைகள் மூடப்பட்டுள்ளன. பூங்காக்கள், உடற்பயிற்சிக்கூடங்கள் மற்றும் அலுவலகங்களை மூடவும் உத்தரவிடப்பட்டுள்ளது. ஹோட்டல்களில் உட்கார்ந்து சாப்பிட அனுமதி இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளதால் ஊழியர்கள் வீடுகளிலிருந்து பணியாற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுருக்கிறது.

பெரும்பாலான பகுதிகளில் பாடசாலைகள் மூடப்பட்டதால் மாணவர்களுக்கு ஒன்லைன் மூலம் வகுப்பு நடத்தப்படுகிறது. தேவையில்லாமல் பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியே வர தடை விதிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் வீடுகளிலேயே முடங்கிக் கிடக்கின்றனர். கொரோனா பரவல் அதிகரிப்பால் விமான நிலையங்கள் அனைத்தும் உஷார்படுத்தப்பட்டுள்ளன. மற்ற நாடுகளிலிருந்து வருபவர்களுக்குத் தீவிர கொரோனா பரிசோதனை நடத்தப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டு வருகின்றனர். கொரோனா பரவலைத் தடுக்க சீன அரசு தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது.

கொரோனாவால் பாதிக்கப்பட்டு மீளெழ முடியாத நிலைக்குள்ள நாடுகளில் இலங்கையும் ஒன்றென்பது பரகசியமல்ல. சீனாவில் இந்தத் தொற்றுப் பரவல் ஆரம்பமானபோது அசட்டையாக இருந்த காரணத்தினால், முன்னேற்பாடான சுகாதார ஏற்பாடுகளை செய்யாத காரணத்தினால் பெரும் விளைவுகளை சந்திக்கவேண்டியேற்பட்டது. மக்களின் வாழ்வாதாரம், உயிர்கள் இழக்கப்பட்டதுடன் பொருளாதாரமும் கடுமையாக பாதிக்கப்பட்டது.

இப்போது மீண்டும் அதே தொற்று பரவ ஆரம்பித்துள்ளதால் கடந்தகால அனுபவங்களைக்கொண்டு அதனை எதிர்கொள்ள அரசு தயாராகவேண்டும். கொரோனா, அரசியல் நெருக்கடிகளுக்குப் பின்னால் இப்போதுதான் மக்கள் கொஞ்சமாவது தலைதூக்கி வருகின்றனர். அதுவும் கடும் பொருளாதாரச் சுமையையும் தலையில் ஏற்றிக்கொண்டே மக்கள் அல்லல்படவேண்டியுள்ளது. இந்த மக்களை மீண்டும் கஷ்ட நிலைமையில் வைக்கக்கூடாதெனில், கொரோனாவின் அந்த மீள்பரவல் தொடர்பில் அரசு ஆக்கபூர்வ நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென வலியுறுத்த விரும்புகிறோம்.

வெள்ளம் வரும் முன்னர் அணை கட்டுதல் நல்லதல்லவா?

# தன்னிகரில்லா தமிழ் ஆளுமை
# அவ்வை நடராசன்

மேடைப் பேச்சின் முன்னோடி 'தமிழ்த் தென்றல்' வி.க. என்பார்கள். 'சொல்லின் செல்வர்' என்கிற அடைமொழியுடன் அழைக்கப்பட்டவர் ரா.பி. சேதுப்பிள்ளை. உரையாற்றலின் உன்னதம் என்று அண்ணாவின் மேடைத் தமிழ் போற்றப்படுகிறது. அந்த வரிசையில் ஏற்றிப் போற்றும் தகுதி பெற்ற தகைமைசால் தமிழர் அவ்வை நடராசன் நம்மிடமிருந்தும், தமிழ் மேடைகளிடமிருந்தும் பிரியாவிடை பெற்று அமரராகி இருக்கிறார்.

அகவை 86, உடல்நலக் குறைவு, வயது மூப்பு காரணமாக அமரரானார் என்கிற செய்திக் குறிப்பு தெரிவிக்காமல் விட்டுவிட்ட இன்னொரு தகவல் உண்டு. அது, கொள்ளை நோய்த்தொற்றுக்குப் பின் அவரது தமிழ் வலம் வர மேடைகள் இல்லாமல் போனதும்கூட, அவர் நம்மைவிட்டுப் பிரிந்ததற்குக் காரணமாக இருக்கக்கூடும் என்பது கொள்ளை நோய்த்தொற்று, துணைவியாரை அவரிடமிருந்து பிரித்துச் சென்ற துயரமும் சேர்ந்துகொண்டபோது,



விழுது பாய்ச்சிப் பரந்து விரிந்திருந்த அவ்வை நடராசன் என்கிற ஆலமரத்தின் வேர்கள் அசைந்து, நலிந்துவிட்டன.

'உரைவேந்தர்' ஔவை துரைசாமிப்பிள்ளையின் புதல்வராக நடராசன் பிறந்தபோது, அவர் வள்ளுவரின் 'தம்மின்தன் மக்கள் அறிவுடைமை' என்கிற குறளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கப் போகிறார் என அந்த அறிவுசார் தந்தையார் நினைத்திருந்தாரா என்று தெரியாது. ஆனால், அதுதான் நிகழ்ந்தது. பேராசிரியராகவும், உரையாசிரியராகவும் திகழ்ந்த 'ஔவை' துரைசாமிப்பிள்ளையின் மகன் அவ்வை நடராசன், தமிழ்பேசும் மண்ணையெல்லாம் தன் உரைவீச்சால் மயக்கிய அதிசயத்தை உலகம் வியந்து பார்த்தது.

அவ்வை நடராசனின் கால் பதியாத இடம் தமிழகத்தில் ஏதாவது உண்டா? அவரது குரல் முழங்கா கிராமம் உண்டா? அவரது பெயர் தெரியாத தமிழன்தான் இருந்துவிட முடியுமா? கடந்த அரை நூற்றாண்டு காலமாகத் தமிழ் அமைப்பு எதுவாக இருந்தாலும் அது அவ்வை நடராசனின் பங்களிப்பு இல்லாத அமைப்பாக இருந்ததில்லை.

விரிவுரையாளராக, வானொலி செய்தி அறிவிப்பாளராக, பேராசிரியராக என்று அவரது தொடக்கம் இருந்தாலும், சென்னை இராமலிங்கர் நற்மன்றத்தின் செயலாளராக, 'அருட்செல்வர்' நா. மகாலிங்கத்தின் தொடர்புக்குப் பிறகுதான், நடராசனாரின் வாழ்க்கை புதிய பாதையில் பயணிக்கத் தொடங்கியது. அதுவரை தமிழ் இலக்கியம் சார்ந்த அவரது பார்வை வள்ளலாரிலும், காந்தியத்திலும் திரும்பியபோது, புதிய பரிமாணம் எழுந்தது.

தமிழறிஞர்கள் பலர் இல்லாமல் இல்லை. ஆனால், அவ்வை நடராசன் போன்ற தமிழறிஞர்கள் வேறு எவரும் இருந்ததில்லை. அதற்குக் காரணம், அவரது விரிந்து பரந்த பார்வையும், தெளிந்த நீரோடை போன்ற உள்ளமும், ஆழங்காற்பட்ட புலமையும்! இலக்கியம் தெரிந்ததுபோலவே, இங்கிதமும் தெரிந்திருந்தது அவருக்கு என்பதால்தான் எதிர் எதிர் துருவங்களிடமும்கூட அவரால் நம்பிக்கைக்கு உகந்தவராகத் திகழ முடிந்தது.

தமிழக அரசின் மக்கள் செய்தித் தொடர்புத் துறையில் அவர் கருணாநிதியின் ஆட்சியில் பணியமர்த்தப்பட்டார். அன்று தொடங்கிய அவர்களது நெருக்கம் தலைமுறை கடந்தும் தொடர்ந்தது. கருணாநிதி ஆட்சியில் பணியமர்த்தப்பட்ட அவ்வை நடராசன், அதற்குப் பின் வந்த எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலத்தில் மொழிபெயர்ப்புத் துறை இயக்குநராகவும், தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் பண்பாட்டுத் துறை செயலாளராகவும் இருந்தார்.

ஜெயலலிதா தலைமையிலான ஆட்சியின்போது தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக அவர் நியமிக்கப்பட்டார். கருணாநிதி ஆட்சியில் நடந்த செம்மொழி மாநாட்டில் அவருக்கு முக்கியமான இடம் வழங்கப்பட்டது. அரசியலுக்கு அப்பாற்பட்டு, மனமாச்சரியங்களைக் கடந்து கருணாநிதி, எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா மூவராலும் அவ்வை நடராசனின் தமிழ் மதிக்கப்பட்டது, அங்கீகரிக்கப்பட்டது என்பதன் வெளிப்பாடுதான் அது.

எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலத்தில் மதுரையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டிலும் சரி, அதற்குப் பிறகு ஜெயலலிதா ஆட்சியின்போது தஞ்சையில் நடைபெற்ற ஏழாவது உலகத் தமிழ் மாநாட்டிலும் சரி, கருணாநிதி ஆட்சியில் கோவையில் நடந்த செம்மொழித் தமிழ் மாநாட்டிலும் சரி, அவ்வை நடராசன் பெரும் பங்கு வகித்தார் என்பது அவரது தமிழாளுமையின் அடையாளம். உலகில் தமிழ் மாநாடு எங்கே நடந்தாலும், அதில் அவ்வையின் பங்களிப்பு இல்லாமல் இருந்ததில்லை.

பட்டிமன்றம் என்கிற சொற்பொழிவுக் கலையின் தனித்துவத் தமிழ் வடிவம் இன்று தமிழ் அடையாளமாக மாறி இருப்பதற்கு அவ்வை நடராசனின் பங்களிப்பு அளப்பரியது. பட்டிமன்ற நடுவர் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு தவத்திரு குன்றக்குடி அடிகளார் இலக்கணம் வகுத்தார் என்றால், அவ்வை நடராசன் அதன் இலக்கியமாக அமைந்தார். நூற்றுக்கணக்கான இளம் பேச்சாளர்கள் அவரால் அரங்கேறினார்கள். கைதட்டல்களால் அரங்கங்களை அதிர வைத்தார்கள்.

அது சங்கத் தமிழாக இருந்தாலும் சரி, சமயத் தமிழாக இருந்தாலும் சரி, கம்ப காதையாக இருந்தாலும் சரி, கண்ணகி காப்பியமானாலும் சரி, பாரதியோ, பாரதிதாசனோ, கண்ணதாசனோ யாராக இருந்தாலும் அவ்வை நடராசனின் நா நுனியில் வலம் வரும் விந்தை கலைவாணியின் அருள். அது அவ்வைக்கு மட்டுமே வாய்த்த வரம்.

தமிழக அரசின் மொழிபெயர்ப்புத் துறை இயக்குநராக இருந்து ஆட்சித் தமிழுக்கு அவ்வை நடராசன் வழங்கியிருக்கும் வார்த்தைக் கொடைகள் ஏராளம், ஏராளம். அது தமிழோ, ஆங்கிலமோ சரளமாகப் பேசுவது மட்டுமல்லாமல், ஆழங்காற்பட்ட புலமையுடன் வலம் வந்தார் அவர் என்பதை நினைவுகூராமல் இருந்துவிட முடியாது.

கம்பரைப் பற்றி பேசும்போது மில்டனையும், பாரதி குறித்து உரையாற்றும்போது ஷெல்லியையும் அவ்வப்போது மேற்கோள் காட்டுவது அவ்வையின் தனிச்சிறப்பு. அவரால் எது குறித்தும் பேச முடியும்; விவாதிக்கவும் முடியும். அவரது நகையுணர்வு மிக்க சொல்லாடலில் மயங்காதவர் கிடையாது. யார் குறித்தும் அவர் அவதூறு கூறி கேட்டிருக்க முடியாது.

'இயன்றவரை பாராட்டுவது, தகுதியற்றவை குறித்து மௌனம் காப்பது' என்பதை தனது வாழ்க்கைச் சித்தாந்தமாகவே கொண்டிருந்த மாமனிதர் அவ்வை நடராசனார் என்பதை அவரைத் தெரிந்தவர்கள் அறுதியிட்டுக் கூறுவார்கள்.

''தமிழ் உட்கார தன் நாக்கையே நாற்காலியாகக் கொடுத்தவன் இவன்; இவன் விரல் நுனியில் இலக்கணம் இருக்கிறது, குரல் நுனியில் இலக்கியம் இருக்கிறது'' என்று கவிஞர் வாலியும்,

''எதுவரைக்கும் தமிழறிஞர் இந்த நாளில் ஏற்ற மிகக் கொண்டிருப்பார் என்று கேட்டால், இதுவரைக்கும் என்றெடுத்துக் காட்ட இங்கே இவரைத்தான் நான் சுட்டிக்காட்டுகின்றேன். மது சுரக்கும் தமிழ்ப் பேச்சால், மதியின் மாண்பால், மணிதெறிக்கும் உரைவீச்சால், தேன் கனிந்த அதிமதுரக் கவிபோலப் பழகும் இந்த அவ்வை நடராசன் என்றும் வாழ்க!'' என்று கவிஞர் சுரதாவும் வாழ்த்தி மகிழ்ந்த,

நாம் வாழும் காலத்தில் வாழ்ந்த பேராசான் விடிவெள்ளியாய் எழுந்து, கதிரோன்போல் ஒளிவீசி, காரிருளில் கலந்துவிட்டார். நிகர் என்று சொல்ல வேறொருவர் இல்லாமைதான் ஆளுமை; அவ்வை நடராசன் தன்னிகரில்லா தமிழ் ஆளுமை!

நன்றி - தினமணி

## நக்கல் நமசிவாயம்

நல்ல நேரம் நாங்கள் புட்போல் உலகக் கிண்ணத்துக்கு விளையாட போகேல்ல... போயிருந்தா கட்டாரில கம்பி எண்ண வேண்டி வந்திருக்கும்.. தண்டனைகளும் கடுமையா இருந்திருக்கும்...



## இன்றைய நாளில்...

* 1857 – ஐக்கிய இராச்சியத்தின் சிபெல்லா என்ற பயணிகள் கப்பல் கொழும்புக்கு அருகே மூழ்கியதில் நால்வர் உயிரிழந்தனர்.
* 1910 – சுவீடனில் கடைசி மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.
* 1978 – இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் வீசிய கடும் புயலில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.
* 1979 – மவுண்ட்பேட்டன் பிரபுவைக் கொலை செய்த குற்றத்துக்காக ஐரிஷ் குடியரசு இராணுவத்தைச் சேர்ந்த தோமஸ் மக்மாகன் என்பவருக்கு டப்ளினில் ஆயுள்தண்டனை வழங்கப்பட்டது.
* 1990 – ஈழப்போர்: தமிழீழ விடுதலைப் புலிகள் மாங்குளம் இராணுவ முகாம் மீது தாக்குதலை நடத்தி அதனை முழுமையாகக் கைப்பற்றினர்.
* 2011 – அரேபிய வசந்தம்: யேமனில் 11 மாதங்கள் எதிர்ப்புப் போராட்டங்களை அடுத்து யேமனிய அரச தலைவர் அலி அப்துல்லா சாலி பதவி விலகினார்.

# வெற்றிகரமான நல்லிணக்கத்துக்கு மக்களின் நல்லெண்ணமும் நம்பிக்கையும் அவசியம்



கலாநிதி
ஜெகான் பெரேரா

தமிழ்த் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அடுத்த வருடம் இலங்கையின் 75ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்படும் நாட்களில் தீர்வொன்றைக் காணப்போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியதை தமிழ் அரசியல் சமுதாயம் ஓரளவு சந்தேகத்துடனேயே நோக்கியிருக்கிறது. 1960களிலிருந்து அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் அளித்த வாக்குறுதிகள் முழுமனதுடன் ஒருபோதும் நிறைவேற்றப்படவில்லை என்பதை அவர்கள் அறிவார்கள். ஜனாதிபதியின் முன்னைய ஆட்சிக்காலங்களும் எந்த வகையிலும் விந்தியாசமானவையாக அமையவில்லை.

2015 - 2019 காலப்பகுதியில் அதிகாரப்பரவலாக்கல் கோட்பாட்டை உள்ளடக்கிய புதிய அரசியலமைப்பு ஒன்றைக் கொண்டுவருவதாக ரணில் விக்கிரமசிங்க பிரதமர் என்ற வகையில் உறுதியளித்தார். ஆனால், 2018 பிற்பகுதியில் 52 நாள் சதி முயற்சியின்போது ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவரை நியாயமில்லாத வகையில் பதவிநீக்கம் செய்தார். அவரை மீண்டும் பதவியில் அமர்த்துவதற்கான போராட்டத்தில் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் போன்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் முன்னின்றார்கள். ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராக பதவியேற்றபோது அரசியலமைப்பு சீர்திருத்த உறுதிமொழியை நிறைவேற்றுவார் என்ற ஒரு எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் இருந்தது. ஆனால், எதும் நடக்கவில்லை. மாகாண சபை தேர்தல்கள் கூட நடத்தப்படவில்லை.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணும் முயற்சிகளுக்கு புறம்பாக, புதிய உண்மை மற்றும் நல்லிணக்க செயன்முறையொன்றுக்கும் தலைமைதாங்கி வழிநடத்த ரணில் விக்கிரமசிங்க முன்வந்திருக்கிறார். இலங்கையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை அமைப்பதற்கு தென்னாபிரிக்காவின் ஆதரவைப் பெறுவதற்கு அந்நாட்டு ஜனாதிபதி சிறில் ரமபோசாவை சந்தித்து அவர் கலந்துரையாடினார். உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான தனது கோட்பாடு குறித்து சிவில் சமூகத் தலைவர்களுடன் அண்மையில் கருத்துகளை பரிமாறிய வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி யோசனைகளை முன்வைக்குமாறு அவர்களைக் கேட்டுக்கொண்டார். இந்த ஆணைக்குழுவை வெற்றிகரமானதாக்குவதற்கான உறுதியான அரசியல் துணிவாற்றல் இருப்பதாக அவர் நம்பிக்கை வெளியிட்டார். ஆயுதப்படைகளும் அவற்றின் மீதான குற்றச்சாட்டுகளை தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புவதனால் உண்மை ஆணைக்குழு கோட்பாட்டுக்கு ஆதரவாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

தற்சமயம் இலங்கை ஆயுதப்படைகளின் சகல பிரிவுகளுமே சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளினாலும் சில வெளிநாட்டு அரசாங்கங்களினாலும் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அத்தகைய ஆணைக்குழுவொன்று நம்பகத்தன்மையுடைய தாகவும் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடியதாகவும் அமைவதற்கு கருத்தொருமிப்பைக் காண்பதில் வெளியுறவு அமைச்சர் அக்கறை கொண்டிருக்கிறார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அரசாங்கமும் தாங்கள் செய்வதை உண்மையில் அக்கறையுடனும் நேர்மையாகவுமே செய்வதாக பொதுமக்களை நம்பவைப்பதில் பெரும் சவாலை எதிர்நோக்கவேண்டியிருக்கிறது. தென்னாபிரிக்காவின் நல்லிணக்கச் செய்முறைகளைப் பற்றி ஆராய தூதுக்குழுவொன்றை அந்த நாட்டுக்கு அனுப்புவதற்கு அரசாங்கம் திட்டமிடுவதாக செய்திகள் வருகின்றன. அத்தகைய ஆய்வுகள் கடந்த காலத்திலும் மேற்கொள்ளப்பட்டன.

சனத்தொகையில் ஒரு பிரிவினருக்கு ஒரு நேரத்தில் உண்மையையும் நல்லிணக்கத்தையும் கொடுக்கமுடியாது.

(10ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சரவை முடிவுகள்

## 2022.11.21 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

அமைச்சரவை முடிவுகள்
CABINET DECISIONS
அரசாங்க தகவல் திணைக்களம்
Department of Government Information

(அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசாரப் பிரிவினால் சிங்கள மொழியிலான அமைச்சரவைத் தீர்மானஆவணம், தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)

**01. 75ஆவது சுதந்திர தினத்தன்று கட்டண அறவீடுகளின்றி தேசிய பூங்காக்கள், பொழுதுபோக்கு பூங்காக்கள் மற்றும் தாவரவியல் பூங்காக்களை பார்வையிடுவதற்கு மற்றும் திரைப்படங்களை பார்ப்பதற்கும் பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கல்**

75ஆவது சுதந்திர தினமான 2023 பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி தேசிய பூங்காக்கள், பொழுதுபோக்கு பூங்காக்கள் மற்றும் தாவரவியல் பூங்காக்கள்/இடங்களை இலவசமாகப் பார்வையிடுவதற்கு பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கும், அன்றைய தினம் நாடளாவிய ரீதியிலுள்ள திரையரங்குகளில் நுழைவுச்சீட்டுக் கட்டணத்தின் 50 வீதக் கழிவுடன் திரைப்படங்களைப் பார்ப்பதற்கும் பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. தேசிய புவி உயிர்க்கோளக் காப்பகங்கள் ((National Biosphere Protection Day)) தினத்தைப் பிரகடனப்படுத்தல்**

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 03ஆம் திகதி புவி உயிர்க்கோளக் காப்பகங்கள் தினம் யுனெஸ்கோ பொதுச் சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. புவி உயிர்க்கோளக் காப்பகங்களைப் பாதுகாப்பதற்கான ஊக்குவிப்புகளை ஏற்படுத்துவதற்காக இவ்வமைப்பின் உறுப்புநாடுகள் மக்களின் கவனத்தைத் திருப்புவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென யுனெஸ்கோ அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. அதற்கமைய, ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 03ஆம் திகதி தேசிய புவி உயிர்க்கோளக் காப்பகங்கள் தினத்தை பிரகடனப்படுத்துவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. இலங்கையின் தேசிய ஔடதங்கள் கொள்கையை திருத்தம் செய்தல்**

தேசிய ஔடதங்கள் கொள்கை 2005ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டு இற்றைக்கு 15 ஆண்டுகளாவதுடன், சமகாலத் தேவைகளுக்கு ஏற்புடைய வகையில் குறித்த கொள்கையை திருத்தம் செய்யவேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, சுகாதார அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்படுகின்ற குழுவின் மூலம் தேசிய ஔடதங்கள் கொள்கையை திருத்தம் செய்வதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. இலங்கை அரசு மற்றும் மொரிசியஸ் குடியரசுக்கு (Republic of Mauritius) இடையில் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஆட்களை பரிமாற்றிக்கொள்ளும் ஒப்பந்தம்**

1995ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க குற்றவாளிகளைப் பரிமாற்றல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கை நீதிமன்றத்தால் குற்றவாளிகளெனத் தீர்ப்பளிக்கப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்படுகின்ற வெளிநாடுகளைச் சேர்ந்த பிரஜைகளுக்கு அவர்கள் தத்தமது நாட்டில் தண்டனைகளை அனுபவிக்கக் கூடிய இயலுமை உண்டு. அத்துடன், ஏதேனுமொரு நாட்டில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைப் பிரஜைகளுக்கு எஞ்சியுள்ள தண்டனைக் காலத்தை அனுபவிப்பதற்காக மீண்டும் இலங்கைக்கு அழைத்துவரும் ஏற்பாடுகளும் குறித்த சட்டத்தில் காணப்படுகின்றன. அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கை மற்றும் குறித்த நாட்டுடன் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வது அவசியமாகும்.

அதற்மைய, இலங்கை மற்றும் மொரிசியஸ் குடியரசுக்கும் இடையில் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஆட்களை பரிமாற்றிக்கொள்வதற்கான ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. நச்சுப் போதைப்பொருட்கள் மற்றும் அபாயகர ஔடதங்கள் பாவனையைத் தடுப்பதற்கான ஜனாதிபதி செயலணியை தாபித்தல்**

நச்சுப் போதைப்பொருட்கள் மற்றும் அபாயகர ஔடதங்கள் பாவனையைத் தடுப்பதற்காக பொருத்தமான நடவடிக்கைகளை அடையாளங்காணல், திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்காக ஜனாதிபதி செயலணியொன்றை தாபிப்பதற்காக பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி, நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. 2022ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சரவையால் நியமிக்கப்படுகின்ற குழுவை நியமித்தல்**

2002ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க சக்திவலு வழங்கல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 02ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய நியமிக்கபட்டுள்ள சக்திவலு வழங்கல் குழுவின் பரிந்துரைக்கமைய விடயதான அமைச்சர், எந்தவொரு நபருக்கு அல்லது கம்பனிக்கு பெற்றோலியப் பொருட்கள் இறக்குமதி, ஏற்றுமதி, விற்பனை, விநியோகம் மற்றும் பகிர்ந்தளித்தல் போன்றவற்றுக்கு அனுமதிப்பத்திரம் வழங்க முடியுமெனக் குறிப்பிடப்பட்டுள்ள 2022ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 5(1)ஆம் உறுப்புரையில் உட்சேர்க்கப்பட்டுள்ளது.

ஆனாலும் 2002ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க சக்திவலு வழங்கல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தில் இரண்டு வருட காலத்திற்கு விதிக்கப்பட்டுள்ளமையால் குறித்த சட்ட ஏற்பாட்டின்கீழ் நியமிக்கப்பட்ட சக்திவலு வழங்கல் குழு இரத்துச்செய்யப்பட்டுள்ளது. ஆனாலும், 2022ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க 2022ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டத்தின் பிரகாரம் சக்திவலு வழங்கல் குழுவுக்குப் பதிலாக அமைச்சரவையினால் நியமிக்கப்படும் குழுவை நியமிப்பதற்கு ஏற்பாடுகள் உள்ளன. அதற்கமைய, குறித்த குழுவை நியமிப்பதற்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. சுற்றாடல் கூருணர்வுப் பிரதேசங்கள் தொடர்பான தேசிய கொள்கை**

சமகாலத்தில் இடம்பெறுகின்ற முறையற்ற காணிப் பயன்பாடுகள் மற்றும் விவசாய முறைகள், திண்மக் கழிவகற்றல் மற்றும் பேண்தகு வகையில் இயற்கை வளங்களைப் பயன்படுத்தாமை போன்ற பல்வேறு மனித நடவடிக்கைகளால் சுற்றுச்சூழல் அழிவுகள், மண்ணரிப்பு, நீர்மூலங்கள் வற்றிப்போதல் மற்றும் மனித – வனவிலங்குகள் மோதல்கள் போன்ற பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. அதனால் உயிர்ப்பல்வகைமை மற்றும் சுற்றாடல் தொகுதிகளின் இயல்பான இயக்கங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. இந்நிலைமை சுற்றாடல் தொகுதிகள் நீண்டகாலமாக அழிவடைந்து செல்வதற்குக் காரணமாக அமைகின்றன. அதனால், அனைவருக்குமான சமூகப் பொருளாதார ஆரோக்கியம் மற்றும் வாழக்கூடிய சூழலுக்காக சுற்றாடல் கூருணர்வுள்ள பிரதேசங்களை நிறுவுவதன் மூலம் ஆரோக்கியமான, பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட சுற்றாடல் மற்றும் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்காக சுற்றாடல் கூருணர்வுப் பிரதேசங்கள் தொடர்பான தேசிய கொள்கையை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, நாடளாவிய ரீதியில் காணப்படும் சுற்றாடல் கூருணர்வுப் பிரதேசங்களை அடையாளங்கண்டு, குறித்த பிரதேசங்களின் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவத்திற்காக சமூகத்தவர்கள், தனியார் துறையினர், அரச துறையினர் மற்றும் விசேட நிபுணத்துவர்கள் போன்ற அனைத்துத் துறையினரிடமும் பங்களிப்புகளைப் பெற்றுக்கொண்டு மற்றும் முகாமைத்துவ அணுகுமுறையொன்றை அனைத்து மட்டங்களிலும் உறுதிப்படுத்தி சுற்றாடல் கூருணர்வுப் பிரதேசங்களின் பாதுகாப்புக்கும், பேண்தகு வகையிலான பயன்பாட்டுக்கும் தேவையான வழிகாட்டல்களை வழங்குவதற்காக இலங்கையின் சுற்றாடல் கூருணர்வுப் பிரதேசங்கள் தொடர்பான தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. இலங்கை சுற்றாடல் குறிச்சொல் பெயரிடல் (National framework for Eco Labelling) தொடர்பான தேசிய சட்டகம்**

நீண்டகால சுற்றாடல், சமூக மற்றும் பொருளாதார நல்விருத்திக்காக உற்பத்தியாளர்கள் பேண்தகு வகையில் தமது உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், நுகர்வோர் பொறுப்புடனும் புத்திகூர்மையாகவும் உற்பத்திகள் மற்றும் சேவைகளை நுகர்தல் அவசியமாகும். அதற்காக பேண்தகு அபிவிருத்தி நோக்கம் 12 இன் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு பேண்தகு வகையிலான நுகர்வு மற்றும் உற்பத்திகளை உறுதிப்படுத்தல், அத்தாட்சிப்படுத்துவதற்காக தரநிலைப்படுத்தல் மற்றும் சான்றுப்படுத்தல் போன்ற விஞ்ஞான ரீதியான முறைகளை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது.

அதற்கமைய, உற்பத்திகளின் சுற்றாடல் செயலாற்றுகையை தமது வாடிக்கையாளர் உள்ளிட்ட ஏனைய விநியோகச் சங்கிலியில் தொடர்புபட்டுள்ள தரப்பினர்கள் நம்பத்தன்மையுடன் குறித்த உற்பத்திகளை கொள்வனவு செய்யும்போது, தீர்மானம் எடுப்பதற்கு இயலுமாகும் வகையில் சுற்றாடல் குறிச்சொல் பெயரிடல் (National framework on Eco Labelling) தொடர்பான தேசிய சட்டகத்தை நடைமுறைப் படுத்துவதற்காக சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. உள்ளூராட்சி அதிகாரசபைகளில் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல்**

தீர்மானமெடுக்கின்ற செயன்முறையில் இளைஞர் பிரதிநிதித்துவத்திற்கு வாய்ப்புகளை வழங்குவதற்காக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. தற்போது கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிறேம்நாம் ஸ்ரீ தொலவத்தவால் தனிப்பட்ட உறுப்பினர் சட்டமூலமொன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த சட்டமூலத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும், ஒட்டுமொத்த இளைஞர் சமூகத்தின் நலன்களுக்காகவும், அவர்களுடைய விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ளக்கூடிய வகையிலான சூழலை உருவாக்கும் நோக்கில் உள்ளூராட்சி சபைகளில் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, உள்ளூராட்சி அதிகாரசபை தேர்தல் கட்டளைச் சட்டத்தில் தற்போது காணப்படுகின்ற ஏற்பாடுகளுக்கமைய பெண்களுடைய பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்படுகின்ற வகையில் முதலாவது நியமனப் பத்திரத்திற்கமைய தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 25 வீதத்திற்கு குறையாததும் மற்றும் இரண்டாவது நியமனப் பத்திரத்திற்கமைய தெரிவுசெய்து அனுப்பவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 25 வீதத்திற்குக் குறையாததுமான இளைஞர் பிரதிநிதிகளை நியமிப்பதற்கான ஏற்பாடுகளை உட்சேர்த்து உள்ளூராட்சி அதிகாரசபை தேர்தல் கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை கொள்கை ரீதியாக அங்கீகரித்துள்ளது.

**10. தேர்தல் பிரசார செலவுகளை கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை தயாரிக்கும் சட்டம்**

அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் தேர்தல் பிரசார செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்காக சட்டவரைஞரால் சட்டமூலமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த சட்டமூலத்திற்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. 1973ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க தேசிய சுவடிகள் காப்பக சட்டம்**

2012 டிசம்பர் மாதம் 05ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய 1973 ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க தேசிய சுவடிகள் காப்பக சட்டத் திருத்தத்திற்கான சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக சட்டவரைஞரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் சட்டமூலமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக சமகால அமைச்சரவையின் கொள்கை ரீதியான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளவேண்டுமென சட்டவரைஞரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடதாசி ஆவணங்களுக்கு மேலதிகமாக ஒலி, ஒளி ஆவணங்கள், திரைப்பட ஆவணங்கள் மற்றும் மின்னணு ஆவணங்கள் போன்றன பாதுகாப்புக்காக சமர்ப்பிக்கப்படுவதால், சர்வதேச தரநிலைப்படுத்தல்கள் மற்றும் உள்ளூர் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் தேசிய சுவடிகள் காப்பக சட்டம் மேலும் திருத்தப்படவேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, ஆவண முகாமைத்துவம், ஆவணக் காப்பு மற்றும் மின்னணு ஆவணங்களின் முகாமைத்துவம் தொடர்பான வல்லுநர்களுடன் அடங்கிய குழுவொன்றை நியமித்து பொருத்தமான திருத்தங்களை அடையாளங்காண்பதற்கும், அதற்கமைய பொருத்தமான அறிவுறுத்தல்களை உட்சேர்த்து தற்போது சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தை திருத்தம் செய்வதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. 1865ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டத் திற்குப் பதிலாக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தல்**

தற்போது நடைமுறையிலுள்ள 1865ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பொலிசு கட்டளைச் சட்டம் இதுவரை 37 தடவைகள் திருத்தம் செய்யப்பட்டுள்ள துடன், குறித்த கட்டளைச் சட்டத்தை மீண்டும் திருத்தம் செய்வதற்காக 2014 நவம்பர் மாதம் 19ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும், சமகால சமூக நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, 1865ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**13. 1969ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

1969ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள 2022/19ஆம் இலக்க செலுத்தல் முறைமை களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் மற்றும் 2022/20ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.


**14. முன்மொழியப்பட்டுள்ள வங்கிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

இலங்கை மத்திய வங்கியால் ஒழுங்குபடுத்தப்படுகின்ற நிதி நிறுவனங்களை நெருக்கடி முகாமைத்துவ சட்டகத்தின் கீழ் (Crisis management framework) வலுவூட்டவேண்டிய தேவை துரிதமானதும் முன்னுரிமையளிக்கப்பட வேண்டிய பணியாக இலங்கை மத்திய வங்கி அடையாளங் கண்டுள்ளது.

நிதிப் பிரிவின் பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்தலுக்காக தீர்வு சட்டகத்தை பலப்படுத்தவேண்டிய தேவை சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறுகியகாலப் பகுதியில் முழுமையான புதிய சட்டமொன்றைத் தயாரிப்பதிலுள்ள சிரமங்களைக் கருத்திற்கொண்டு, அனுமதிப்பத்திர உரித்துடைய வங்கித் தீர்வு, வாப்புத்தொகை காப்புறுதி மற்றும் அனுமதிப்பத்திர உரித்துடைய வங்கிகளின் கணக்குகளை தீர்த்து மூடுதல்/முடிவுறுத்தலுக்கான ஏற்பாடுகளை உட்சேர்த்து 1988 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கிகள் சட்டத்திற்கு குறைநிரப்பியாக முன்மொழியப்பட்டுள்ள வங்கிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த சட்டமூலத்தை அடிப்படையாகக்கொண்டு சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.




# நியாயமற்ற வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் அரசின் கவனம் தேவை

## வர்த்தக மற்றும் தொழில் சங்கங்களின் சபைகள் அறிக்கை

20 ஒக்டோபர், 2022 அன்று வெளியிடப்பட்ட 1972ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க சட்டமூலத்துடன் தொடர்புடைய 2303/24 அசாதாரண வர்த்தமானி அறிவித்தலில் கப்பல் முகவர்கள், சரக்கு அனுப்புபவர்கள், கப்பல் அல்லாத பொது விநியோகத்தர்கள் மற்றும் கொள்கலன் சேவைகள் தொடர்பான உரிமச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டது.

தற்போதுள்ள கட்டணக் கட்டமைப்பில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளதுடன், முழு கொள்கலன் சுமைகள் மற்றும் கொள்கலன் எடையை விட குறைவான இறக்குமதி ஏற்றுமதிகளுக்கு அதிகபட்ச விநியோகக் கட்டணங்களில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. ஒரு கனமீற்றருக்கு 8 அமெரிக்க டொலர் செலவு மீட்புக் கட்டணம் இறுதி இறக்குமதியாளரிடம் வசூலிக்கப்படுவதுடன், சலவைக் கட்டணம், பொருட்களை அகற்றும் கட்டணம் மற்றும் போக்குவரத்துக் கட்டணம் ஆகியவை செலவு மீட்புக் கட்டணத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

கூட்டு ஆடை சங்கங்களின் மன்றம் (JAAF), தேசிய ஏற்றுமதி சபை, இலங்கை இறப்பர் பொருட்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கம், இலங்கை ஏற்றுமதியாளர்கள் சபை, தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கம், சீனி இறக்குமதியாளர்கள் சங்கம் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் சங்கம் ஆகியவை இணைந்து சந்தை அதிகாரக் கோட்பாடுகளை இந்த புதிய 2304/24 இலக்கம்கொண்ட வர்த்தமானி அறிவித்தல் மீறுவதாகவும் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவிடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளன.

இந்த விதிகள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆகிய இரு துறைகளின் ஒட்டுமொத்த நிலைத்தன்மையையும் போட்டித்தன்மையையும் மோசமாக பாதிக்கிறது எனவும் மன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

# மலையக மக்கள் பின்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர்

## நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன்




(எஸ்.கணேசன்)

"மக்களிடம் வாக்குகளைப்பெற்றுவிட்டு நாம் எதுவும் செய்யாமல் இருக்கவில்லை. நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் மக்களுக்காகக் குரல் எழுப்புகின்றோம். செயற்படுகின்றோம். மலையக மக்களின் பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபைவரை கொண்டுசென்றுள்ளோம்"- என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியா – இராகலை பிரதேசத்தின் மலையக மக்கள் முன்னணியின் தோட்டத்தலைவர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்களுடனான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் (21) நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் பெருந்தோட்டப்பகுதியே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. 63 சதவீத மக்கள் நெருக்கடி நிலைமையை எதிர்கொண்டுள்ளனர் என சர்வதேச அமைப்புகளின் தரவுகள் தெரிவிக்கின்றன. இந்நிலையில், இது தொடர்பில் நாடாளுமன்றத்தின் கவனத்தை ஈர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்படி அநுரகுமார திசாநாயக்கவும், எமது தலைவர் மனோ கணேசனும் கூட்டுப் பிரேரணையொன்றைக் கொண்டுவந்தனர். இவ்விவாதத்தில் பங்கேற்று எமது மக்களின் பிரச்சினைகளை நாம் பட்டியலிட்டோம்.

எனினும், ஒரு சிலர் இதனை விமர்சிக்கின்றனர். மலையக மக்கள் பிற்படுத்தப்பட்ட சமூகம் அல்ல என குறிப்பிடுகின்றனர். இந்த பிற்படுத்தப்பட்ட சமூகம் என்பது இந்தியாவில் சாதி அடிப்படையில் ஒதுக்கப்படுவது. அந்த முறை இலங்கையில் இல்லை. மலையக மக்கள் பின்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதையே நாம் கூற விழைந்தோம்.

200 வருடங்கள் கடந்தும் அவர்களது வாழ்க்கைநிலை மாறவில்லை. இன்னமும் லயன்கள் உள்ளன. எமது மூதாதையர்கள்தான் இந்நாட்டை வளமாக்கினர். அப்படியிருந்தும் நாம் பின்தள்ளப்பட்டுள்ளோம்.

அண்மையில் ஐ.நா. பிரதிநிதிகள் இலங்கை வந்திருந்தபோது அவர்களை நாம் சந்தித்தோம். மலையகப் பிரச்சினைகள் குறித்த ஆவணங்களைக் கையளித்தோம். அடுத்த முறை இலங்கை வரும்போது மலையகம் வருவதாக சொன்னார்கள். எமது பிரச்சினை இம்முறை ஐ.நா. அறிக்கையில் இடம்பெறும். எமது பிரச்சினை ஐ.நா. வரை சென்றுள்ளமை வெற்றிதான்.

மக்களிடம் வாக்குகளைப்பெற்றுவிட்டு எதுவும் செய்யாமல் இருக்கவில்லை. நாடாளுமன்றம் செல்கின்றோம். மக்கள் பிரச்சினைகள் குறித்துப் பேசுகின்றோம். தீர்வுகளை முன்வைக்கின்றோம்" - என்றார்.

# நுவரெலியா இ.போ.ச. பஸ் ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

(நுவரெலியா மேலதிக நிருபர்)

இலங்கை போக்குவரத்து சபையின் நுவரெலியா பஸ் சாரதிகள், நடத்துனர்கள் மற்றும் ஊழியர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 3 மணி முதல் தொடர்ந்து பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்துள்ளனர்.

நுவரெலியா தனியார் பஸ் உரிமையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க வெலிமடை, கதிர்காமம், பதுளை, எல்ல, பண்டாரவளை போன்ற தூரப் பிரதேசங்களில் இருந்து இயக்கப்படும் இ.போ.ச. பஸ்கள் நுவரெலியா பிரதான பஸ் தரிப்பிடத்திற்குள்ளே நிறுத்தப்படாமல் நுவரெலியா - பதுளை பிரதான வீதியில் நிறுத்துவதற்கு தனியான இடம் ஒதுக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இ.போ.சவுக்கு சொந்தமான பஸ்கள் பிரதான பஸ் நிலையத்துக்குள் உட்செல்லக் கூடாது என்று தெரிவித்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் நுவரெலியாவில் இயக்கப்படும் அரச பஸ் சாரதிகள், நடத்துனர்கள் மற்றும் ஊழியர்கள் இணைந்து குறித்த பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.



இதன் காரணமாக நுவரெலியாவில் இருந்து இயக்கப்படும் அரச பஸ்கள் நுவரெலியா - உடபுசல்லாவ பிரதான வீதியில் அமைந்துள்ள நுவரெலியா இ.போ.ச. காரியாலயத்துக்கு அருகில் கடமைக்கு செல்லாமல் தரித்து நிற்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. உரிய தீர்வைப் பெற்றுத்தரும் வரை இப்பணிப்பகிஷ்கரிப்பு தொடரும் என ஊழியர்கள் தெரிவித்தனர். இதனால் பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் மற்றும் மாதாந்த பருவச் சீட்டைப் பெற்றுக்கொண்டோர் சிரமத்திற்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 'தைலோக விஜய பத்ர' உற்பத்தியில் புதிய ஒழுங்கு விதிகள் பின்பற்றப்படும்

## நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ



(கண்டி நிருபர்)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பாக சட்டங்கள் மிகக் கடுமையாகப் பின்பற்றப்படும். அத்துடன் 'தைலோக விஜய பத்ர' என்ற பெயர் கொண்ட கஞ்சா உற்பத்திக்கு புதிய ஒழுங்கு விதிகள் பின்பற்றப்படுமென நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டியில் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக வண. வரகாகொட ஞாபனரத்தன தேரரை சந்தித்து நல்லாசிகள் பெற்றபின் ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பாக கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் குறித்த விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. சந்தேகநபர்களும் கைதாகி வருகின்றனர். எனவே வெகு விரைவில் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர். அது தொடர்பான சட்ட விதிகளை மிகக் கடுமையாக்க உள்ளோம். அத்துடன் 'தைலோக விஜய பத்ர' கஞ்சா செடியில் இருந்து பிரித்தெடுக்கப்படும் இரசாயனப் பொருட்களிலிருந்து விலை உயர்ந்த பல மருத்துவப் பொருட்கள் மற்றும் வலிநிவாரணிகளைத் தயாரிக்க முடியும். எனவே, மேற்படி தாவரத்தை நேரடியாக ஏற்றுமதி செய்யாமல் இரசாயனங்களைப் பிரித்தெடுத்து ஏற்றுமதி செய்யும் முறை உருவாக்கப்படும். அவை உற்பத்தியாகும் இடத்திலேயே தொழிற்சாலை அமைக்கப்பட்டு முடிவுப்பொருள் மட்டும் வெளிகொண்டுவரப் படும். இரசாயனங்களைப் பிரித்தெடுக்கும் தொழிற் சாலையிலிருந்து விதிமுறைகளை மீறி வெளியே எடுத்துவர முடியாது. எனவே, அதுபற்றி அச்சம் கொள்ளத் தேவையில்லை.

அரசியலமைப்பு சபை தொடர்பாக வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அதற்கு அங்கத்தவர்களை நியமிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு பதிலாக வேறொரு சட்டத்தைக் கொண்டுவர முயன்றபோது உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அடுத்து அது தடைப்பட்டது. எனினும், இன்னொரு சட்டமூலம் தயாராகி வருகிறது. தேசிய பாதுகாப்பு மற்றும் தனி நபர் உரிமைகள் இதில் உறுதி செய்யப்படும். இது அரசியல் பழிவாங்கலுக்காக உருவாக்கப்படுவதாக கூறப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

தற்போது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதானோரின் வழக்குகள் தாமதமாவதற்கு குற்றச்செயல் அதிகரிப்பு, சட்டமா அதிபர் திணைக்கள ஆளணி பற்றாக்குறை என்பனவே காரணம். ஓரிரு வழக்குகளை மட்டும் வைத்து முடிவுக்கு வரவேண்டாம். சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் இருக்கலாம் என்று தெரிவித்தார்.

# ஓமான் பணிப்பெண்களை மீட்க இ.தொ.கா. வலியுறுத்து



(நுவரெலியா மேலதிக நிருபர்)

இலங்கையிலிருந்து ஓமான் நாட்டுக்கு பணிப்பெண்களாக கொண்டு செல்லப்பட்டு, அங்கு சிக்கித் தவிக்கும் மலையகம் உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களை சேர்ந்த பணிப்பெண்களை பாதுகாப்பாக நாட்டுக்கு அழைத்து வர வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்த கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் (21) கொழும்பில் இடம்பெற்றது. இதில் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இ.தொ.கா. பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோர் கலந்துகொண்டனர். இது தொடர்பாக இ.தொ.கா. வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சுற்றுலா விசா மூலம் பணிப்பெண்களாக ஓமான் சென்று அங்கிருந்து நாட்டுக்குத் திரும்ப முடியாத நிலையில் தங்கியிருக்கும் மலையகம் உட்பட்ட ஏனைய பிரதேசங்களில் உள்ள பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்து அவர்களை பாதுகாப்பாக நாட்டுக்கு அழைத்து வர வேண்டும் என இக்கலந்துரையாடலில் வலியுறுத்தினோம்.

இதன்போது ஓமானில் விசா இன்றி தங்கியிருக்கும் பணிப்பெண்களிடம் நாளாந்தம் 5ஆயிரம் ரூபா அபராத தொகை அறவிடப்படுகிறது. அதேநேரத்தில் இலங்கையிலிருந்து ஓமானுக்கு பணிப்பெண்களாக சேர்த்து கொள்வதற்கான அனைத்து செலவுகளையும் திருப்பித்தந்துவிட்டு பணிப்பெண்களை இலங்கைக்கு அழைத்துச் செல்லுமாறு அந்நாடு அறிவித்துள்ளது.

இது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாக குறித்த கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சும் இணைந்து ஓமானில் சிக்கியுள்ள மலையகம் உள்ளிட்ட நாட்டின் ஏனைய பிரதேசங்களை சேர்ந்த பணிப்பெண்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதாக இ.தொ.கா தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

# மீரியபெத்தையில் மின் விநியோகத்தை மீளவும் பெற்றுத்தருமாறு வேண்டுகோள்

(பதுளை நிருபர்)

மண் சரிவு அபாயம் எதிர்நோக்கப்பட்டுள்ள மீரியபெத்தை பகுதியில் துண்டிக்கப்பட்ட மின் விநியோகத்தை மீளவும் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்று, கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் இலங்கை மின்சார சபை நிறைவேற்று அதிகாரிக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,



பதுளை மாவட்ட அபிவிருத்தி இணைப்புக்குழுக் கூட்டத்தின் போது, மேற்படி விடயம் குறித்து கலந்துரையாடப்பட்டு, இறுதி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அம்முடிவிற்கமைய, மண்சரிவு அபாயம் எதிர்நோக்கப்பட்டுள்ள, மீரியபெத்தை பகுதியில் துண்டிக்கப்பட்டிருக்கும் மின் விநியோகத்தினை, மீளவும் பெற்றுக்கொடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே, அதனை செயல்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் பதுளை மாவட்ட இணைப்புக்குழுத் தலைவரும் ஊவா மாகாண ஆளுநருமான முஸம்மில், பதுளை மாவட்ட அரச அதிபர், ஹல்துமுள்ள பிரதேச செயலாளர், ஹல்துமுள்ள பிரதேச சபை உறுப்பினர் எம். தினேஷ் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

# மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் மக்கள் அஞ்சலிக்காக நல்லூரில் அங்குரார்ப்பணம்





(யாழ். நிருபர்)

மாவீரர் வாரம் ஆரம்பமாகியுள்ள நிலையில், யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்திற்கு முன்பாக மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் நேற்று முன்தினம் மக்கள் அஞ்சலிக்காக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

இதன்போது 34 கல்வெட்டுகள் 17 மாவீரர்களின் பெற்றோரால் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதுடன், அவை நவம்பர் 27ஆம் திகதி வரையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளன.

தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்திற்கு முன்பாக உள்ள பகுதிகளில் யாழ். மாநகர சபையின் அனுமதிகளைப் பெற்று குறித்த கல்வெட்டுகள் வைக்கப்பட்டுள்ளன. மாவீரரின் பெற்றோரால் ஈகைச் சுடரேற்றப்பட்டு கல்வெட்டுகள் ஒரே நேரத்தில் மாவீரர்களின் பெற்றோரால் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த மாவீரர்களை நினைவுகூரும் மாவீரர் வாரம் நேற்று முன்தினம் (21) ஆரம்பமானது. விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு தமது உயிரை போராட்டக்களத்தில் தியாகம் செய்தவர்கள் நினைவாக கார்த்திகை 27ஆம் திகதி மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தொலைபேசி கடையை உடைத்து திருடியவருக்கு விளக்கமறியல்

சுன்னாகம் பஸ் நிலையத்துக்கு முன்னால் உள்ள தொலைபேசி கடையை உடைத்து அங்கிருந்து இலத்திரனியல் உபகரணங்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில், கடந்த ஞாயிற்றுக்கிழமை (20) சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர் புத்தூர் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திருட்டுச் சம்பவம் கடந்த 08ஆம் திகதி இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் கடை உரிமையாளரினால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டிருந்த பொலிஸார், சந்தேக நபரை கைதுசெய்ததுடன், திருடிய பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நேற்று முன்தினம் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை அவரை டிசம்பர் மாதம் 05ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.




**மாவீரர் வாரத்தின் ஆரம்ப நாளான நேற்று முன்தினம் பிற்பகல் கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லம் முன்பாக அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றிருந்தது. குறித்த நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் கலைவாணி, மாவீரர்களின் உறவுகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர். (சாவகச்சேரி நிருபர்)**

# வேலைவாய்ப்பின்மையால் ஏற்படுகின்ற வறுமை விரக்தியே போதைப்பொருள் பாவனை அதிகரிப்புக்குக் காரணம்

## அங்கஜன் எம்.பி. சுட்டிக்காட்டு



(சாவகச்சேரி நிருபர்)

இன்றைய இளைஞர்கள் மத்தியில் வேலைவாய்ப்பு இன்மையால் ஏற்படுகின்ற வறுமை விரக்தி காரணமாகவே போதைப்பொருள் பாவனை அதிகரித்திருப்பதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத்திட்ட உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்;

கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களை மையப்படுத்தியே பாதுகாப்பிற்கென அதிக நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அபிவிருத்தியால் பின்தங்கியுள்ளன. போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முழுமையான நிவாரணம் கூட இதுவரை வழங்கப்படவில்லை. முன்னாள் போராளிகள், காணாமலாக்கப்பட்டவர்கள், மாற்றுத்திறனாளிகளை மீண்டும் சமூகத்துடன் இணைக்கும் வேலைத்திட்டங்கள் எவையும் இல்லை. தியாகங்களை செய்யுமாறு ஏனைய மக்களிடம் கேட்பதைபோன்று எமது மக்களிடம் கேட்க முடியாது. எமது மக்கள் ஏற்கனவே பல தியாகங்களை செய்துள்ளனர். இப்போதும் செய்கின்றனர்.

தற்போது பொருளாதார நெருக்கடியால் வேலைவாய்ப்புகள் இல்லை. வறுமை விரக்தி காரணமாகவே இளைஞர்கள் மத்தியில் போதைப் பாவனை அதிகரிக்கின்றது. பாதுகாப்பிற்கு மேலதிகமாக ஒதுக்கிய நிதியை போதைப் பொருளை கட்டுப்படுத்த பயன்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# மன்னாரிலிருந்து சர்வமத குழுவினர் கிளிநொச்சிக்கு விஜயம்

(மன்னார் நகர் நிருபர்)

மன்னாரிலிருந்து சர்வமத குழுவொன்று நேற்றுமுன்தினம் (21) கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் செய்து அங்குள்ள சர்வமத தலைவர்களை சந்தித்ததோடு, மத ஸ்தலங்களுக்கும் விஜயம் செய்தனர்.

மன்னார், கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில் இயக்குனர் எஸ்.அன்ரன் அடிகளாரின் ஒருங்கிணைப்பில் மன்னாரிலிருந்து சர்வமத தலைவர்கள் உள்ளடங்கலாக குழுவொன்று நேற்று முன்தினம் காலை மன்னாரிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்திற்கு சென்றது.

மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் சமய நல்லிணக்கப் பிரிவின் ஊடாக உறவுப்பால நிகழ்வாக குறித்த விஜயம் அமைந்தது.

மன்னாரிலிருந்து விஜயம் செய்த சர்வமத குழுவினர் கிளிநொச்சி கறிற்றாஸ் அலுவலகத்தில் விசேட சந்திப்பு இடம்பெற்றது.

அதனைத்தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மத ஸ்தலங்களுக்கு குறித்த குழுவினர் விஜயம் செய்து மதத் தலைவர்களுடன் கலந்துரையாடி தமது விஜயம் குறித்து தெளிவுபடுத்தினர்.



# பேருவளையில் பேரலைகளின் சக்தி - டக்ளஸின் வழிநடத்தலில் சர்வதேச கடற்றொழிலாளர் தினம்





(பேருவளை பீ.எம்.முக்தார்)

பேரலைகள் போன்ற சவால்களை எல்லாம் முறியடித்த அமைச்சர் டக்ளஸின் தலைமையில், பேரலைகளின் சக்தி எனும் தொனிப்பொருளில் சர்வதேச கடற்றொழிலாளர் தினம் கொண்டாடப்படுவது மகிழ்ச்சியளிக்கின்றது - என்று பிரதமர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.

மேலும், நாடு பொருளாதார நெருக்கடிகளை சந்தித்துள்ள காலகட்டத்தில் சவால்மிக்க பொறுப்பை ஏற்றுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இராஜாங்க அமைச்சர் பியல் நிஸாந்த ஆகியோரின் செயற்பாடுகளை பாராட்டிய பிரதமர், நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு கடற்றொழில் துறையிடமிருந்து கணிசமான பங்களிப்பை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

கடற்றொழில் சமூகத்தை மேம்படுத்துவதற்கான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புதிய தொலை நோக்கிற்கமைவாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த ஆகியோரின் வழிநடத்தலில் சர்வதேச கடற்றொழிலாளர் தினம் பேருவளையில் நேற்றுமுன்தினம் (21) இடம்பெற்றது.

பேரலையின் சக்தி எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பிரதமர் தினேஸ் குணவர்தன கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடற்றொழிலாளர் சமூகத்தின் நலனைக் கருத்திற்கொண்டு, புதிய கடற்றொழில் காப்புறுதித் திட்டம், கடற்றொழிலாளர்களுக்கான புதிய ஓய்வூதியத் திட்டம், ஆழியின் அரும்புகள் (தியவர கெக்குளு) சிறுவர் சேமிப்புத் திட்டம் போன்றவை ஆரம்பிக்கப்பட்டதுடன், கடற்றொழில் குடும்பங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற பிள்ளைகள் கௌரவிக்கப்பட்டதுடன் புலமைப்பரிசில்களும் வழங்கப்பட்டன.

அத்துடன், களுவாமோதர வாய்க்காலில் நன்னீர் மீன்குஞ்சுகள் விடுவித்தல், அலங்கார மீன் வளர்ப்பில் ஈடுபடும் தொழில் முயற்சியாண்மையாளர்கள் 60 பேருக்கு இரண்டாம் கட்ட நிதியுதவி, அலங்கார மீன் வளர்ப்பில் ஈடுபடும் புதிய தொழில் முயற்சியாளர்கள் 4 பேருக்கு தலா 2.5 இலட்சம் ரூபா நிதியுதவி போன்றவையும் வழங்கப்பட்டன.

அதேவேளை, பேருவளை, மருதானை கடற்றொழிலாளர் இறங்குதுறையை பார்வையிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த இறங்குதுறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தூர்வாரல் செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுடனும் மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபன அதிகாரிகளுடனும் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 43 கோடி ரூபா பெறுமதியான மருந்துகளை வழங்கியது கொரியா





World Unreached People Mission அமைப்பின் பணிப்பாளரான ஹல்துமுல்லையைச் சேர்ந்த அருட்தந்தை ஏ. பிரான்சிஸின் வேண்டுகோளின்பேரில் நாட்டுக்குத் தேவையான அத்தியாவசிய மருந்துவகைகளை கொரியா வழங்கியுள்ளது. அதனடிப்படையில் சுகாதார அமைச்சின் அனுமதியுடன் 43 கோடி ரூபா பெறுமதியான மருந்துவகைகள் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

(தகவல்: கலாபூஷணம் மாதம்பை கதிர்)

# யாழ். ஒஸ்மானியா கல்லூரிக்குள் நுழைந்து ஆசிரியர் மீது தாக்குதல்

## மாணவரொருவரின் தந்தை அத்துமீறல்



யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி ஆசிரியர் மீது மாணவனின் தந்தை தாக்குதல் மேற்கொண்டதில் ஆசிரியர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஒஸ்மானியா கல்லூரி உடற்பயிற்சி ஆசிரியரான துரையப்பா கௌரிபாலன் எனும் ஆசிரியரே காயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

பாடசாலை மலசலகூடத்திற்கு செல்வதாக சென்ற மாணவன் நீண்ட நேரமாகியும் வராததால், மாணவனை தேடி குறித்த ஆசிரியர் சென்றுள்ளார். அங்கு மாணவன் சந்தேகத்திற்கு இடமான முறையில் காணப்பட்டமையால் மாணவனை ஆசிரியர் விசாரித்தபோது மாணவன் அங்கிருந்து தப்பிச் சென்று, தனது தந்தையாரை அழைத்துக்கொண்டு பாடசாலைக்கு வந்துள்ளான்.

பாடசாலைக்குள் அத்துமீறி நுழைந்த மாணவனின் தந்தை, ஆசிரியர்களின் ஓய்வறையில் இருந்த குறித்த ஆசிரியர் மீது சரமாரியாக தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த ஆசிரியரை சக ஆசிரியர் அங்கிருந்து மீட்டு, வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த சம்பவத்தை சில தரப்பினர் இனங்களுக்கு இடையிலான முறுகல் நிலையாக காண்பிக்க முயற்சித்து வருவதாகவும், அதனால் அங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ். பல்கலை ஊடகக் கற்கை மாணவர்களது ஆவணப்படங்கள் நேற்று திரையிடப்பட்டன





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களால் தயாரிக்கப்பட்ட ஆவணப்படங்கள் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் திரையிடப்பட்டன.

இந்த ஆவணப்பட விழாவில் சமூகத்தின் பல்வேறு விடயங்களைப் பற்றி பேசுகின்ற பதினான்கு ஆவணப்படங்கள் திரையிடப்பட்டன.

ஆனையிறவு உப்பளத்தின் தற்போதைய நிலை சொல்லும் 'கடல்விளை அமுதம்', மலையகக் கிராமமொன்றின் விளையாட்டு மைதானத் தேவையைப் பற்றி பேசும் 'மைதானம்', நீர்வேலி வாழை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகள் பற்றி பேசும் 'வாழைக்குலைச் சங்கம்', சூழல் மாசடைவதை ஏதோ ஒருவகையில் குறைக்கும் வண்ணம் பழமையை வழமைக்கு கொண்டுவரும் சிறிய முயற்சி பற்றி பேசும் 'மிதியுந்து', சிற்பக்கலையில் அருகிவரும் உளிப்பயன்பாடு மற்றும் அதிகரித்துவரும் இயந்திரங்களின் பயன்பாடு பற்றி பேசும் 'உளி தொடாக்கலை' ஆகிய ஆவணப்படங்கள் திரையிடப்பட்டன.

அத்துடன், வழக்கொழிந்து போயிருக்கும் சூத்திரக் கிணறு நீர்ப்பாசன முறை பற்றி பேசும் 'அழிவடைந்துபோன பழமை', ஆழக்கடலின் ஆபத்து அறியாது அதில் நீராடச்சென்று மரணித்துப்போன மூன்று சகோதரர்களின் கதை சொல்லும் 'செம்மலையின் கண்ணீர்', மரபு ரீதியான கால்நடை வளர்ப்பு மூலமான தற்கால தன்னிறைவுப் பொருளாதாரம் நோக்கிய நகர்வு பற்றி பேசும் 'வன்னியின் ஆவுடையூர்', நீடித்த வனையுடனான பல வர்ண 'பற்றிக்' உள்ளூர் உற்பத்தி பற்றி பேசும் 'வானவில்', நந்திக்கடல் மீன்பிடியின் தற்போதைய நிலை பற்றி பேசும் 'நந்திக்கடல் மீன்பிடி', மலையகப் பெண்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் வாழ்வியற் சிக்கல்களைச் சொல்லும் 'அம்மா', வரலாற்றுச் சின்னங்களில் ஒன்றாக இருந்து இன்று சிதைவடைந்திருக்கும் கீரிமலை வெளவால் புறாக்குகையின் கதை சொல்லும் 'மறைந்திருக்கும் தொன்மம்', மாற்றுத்திறனாளிக் கலைஞர் ஒருவரின் கலைத்துறைப் பயணம் பற்றி பேசும் 'இருளொளி', தமிழர்களின் பாரம்பரிய இயந்திரப் பொறிமுறை பற்றி பேசும் 'தூய மரச்செக்கு எண்ணெய்' ஆகிய ஆவணப்படங்களும் திரையிடப்பட்டன.




உடப்பு, வம்பிவட்டான் கிராமத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ ஐயப்பசுவாமி ஆலயத்தின் மண்டலாபிஷேகம் நிறைவடைந்து, சங்காபிஷேகம் நேற்று (22) இடம்பெற்றது. இதில் பக்தர்கள் பலர் கலந்துகொண்டு ஐயப்பனின் அருளைப் பெற்றுக்கொண்டனர்.
(உடப்பு செய்தியாளர்)

# யாழ். வலய மாணவர் நாடாளுமன்ற கன்னி அமர்வு நேற்று நடைபெற்றது





நேற்றைய அமர்வு யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பொது மண்டபத்தில், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் தலைமையில் நடை பெற்றது.

விருந்தினர்களுக்கு மாலை அணிவித்து, மேற்கத்தேய இசை வாத்தியங்கள் முழங்க விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டு, கொடியேற்றும் வைபவத்தினை அடுத்து, மங்கள விளக்கு ஏற்றப்பட்டு நிகழ்வு ஆரம்பமானது.

இன்றைய கன்னி அமர்வில், வலய மாணவர் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் சத்தியப்பிரமாணம், சபாநாயகர் தெரிவு, சபாநாயகர் சத்தியப்பிரமாணம், சபாநாயகர் சம்பிரதாயபூர்வமாக சபைக்கு அழைத்து வரப்படுதல், சத்தியப்பிரமாணம், அமைச்சர்கள் சத்தியப்பிரமாணம், அமைச்சுகளின் அறிமுகமும் முன்வைப்புகளும், சபாநாயகர் நாடாளுமன்றத்தை நிறுவுதல் ஆகியன இடம்பெற்றிருந்தன.

வடமாகாண கல்விப் பணிப்பாளர் உதயகுமார் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட இந்நிகழ்வில், விசேட விருந்தினர்களாக கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி சு.பரமானந்தம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் வடமாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.பாலராஜ், வடமாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.சுபாகரன், யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் எம். நிமலநாதன், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர் நாடாளுமன்ற சபாநாயகர், மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.




## Co-ordinator

*A well reputed education institute in Sri Lanka.*

- Should have exposure on handling inbound and outbound calls, calling campaigns, etc.
- Have experience in handling walk in customers.
- Ability to work under pressure and to work as a team.
- Should be skilled on working with MS office packages.
- Should be able to commit for a one-year contract after the initial training.

Interested candidates can apply by sending their CVs to recruitmentbconnected@gmail.com
Contact us on +94 776371134 + 94 777328123.
No: 07, Skelton Gardens,
Colombo 05.

## Sports Officers

*Institution: Department of Sports Development*

Apply: Secretary, Ministry of Sports and Youth Affairs, No:09, Philip Gunawardena Mawatha, Colombo 07.

## Sales Analyst

*Company: JAT Holdings*

Key Requirements: Degree, A part qualification in CIMA
A minimum of 02 years of Experience
Apply: careers@jatholdings.com

## Electricians

*Company: Access Realities PVT Ltd.*

Age: Below 45
Email: kamal@accessengsl.com

## Multi-tasking Assistant

*Leading Local Bank*

Key Requirements:

- To be able to work in the following regions: Kurunegala, Negambo, Chilaw, Gampaha, Nittambuwa.
- Male candidates preferable.
- Outgoing personality.
- Basic spoken English and Sinhala or Tamil required.
- Should be willing to go out for tasks.

Interested candidates can apply by sending their CVs to recruitmentbconnected@gmail.com
Contact us on +94 776 371 134 + 94 777328 123.
No: 07, Skelton Gardens,
Colombo 05

## Assistant Secretary

*Institution: Bank of Ceylon*

Educational Qualification: Attorney–at–Law

Contact: Chief Manager (Sourcing and Career Development)
Bank of Ceylon
26th Floor- Head Office
No:01, Bank of Ceylon Mawatha, Colombo 01.

## Trade Helper (Female/ Male)

*Institution: American Embassy, Colombo*

Educational Qualification: G.C.E. (O/L)
How to Apply: https://lk.usembassy.gov embassy/jobs

## Account Assistants

*Company: WMOM Essentials, Colombo 03.*

Email: wmom.essentials@gmail.com

## Nursery and Primary Teachers

*School: Bishop's College, Colombo 03.*

Educational Qualification: Degree/Diploma
Email: hr@bishopscollegecolombo.com

## Public Relations & Marketing Manager

*Institution: British High Commission, Colombo*

Key Requirements:
Previous marketing and public relations experience, Experience in campaign planning Etc.
For Application: https://bit.ly/3OefzlA

# எட்டு உயிர்களைக் காவு வாங்கிய குறிஞ்சாக்கேணி படகு விபத்து






## ஒரு வருட நினைவேந்தல்

(ஹஸ்பர் ஏ.ஹலீம்)

சாதாரண மழைத்தூறலுடன் காலை 7.25 மணியிருக்கும். அப்போது பெரும் சோகச் சம்பவமொன்று இடம்பெற்றது அதுவே 2021.11.23 அன்று இடம்பெற்ற கிண்ணியா குறிஞ்சாக்கேணி இயந்திரப் படகு விபத்துச் சம்பவமாகும். தற்போது அச்சம்பவத்துக்கு (2022.11.23 ) ஒரு வயதாகிறது. திருகோணமலை மாவட்டம் கிண்ணியா நகர சபை - பிரதேச சபையை இணைக்கும் பாலமே குறிஞ்சாக்கேணிப் பாலம். இந்தப் பாலம் புனரமைப்புக்காக மூடப்பட்டிருந்த நிலையில், இயந்திரப் படகு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அப்போது படகு மூலமே பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலர் பயணித்தார்கள். ஆனாலும், அன்றைய படகு கவிழ்ந்ததில் பாடசாலை மாணவர்கள் உட்பட எட்டு உயிர்கள் பலியாகின.

குறிஞ்சாக்கேணி கரையோரம் இருந்து கிண்ணியா நகர பகுதியை நோக்கி ஆற்றை கடக்கும்போது இந்த இயந்திரப் படகு விபத்து இடம்பெற்றது. கிண்ணியா அல்-அஷ்கர் வித்தியாலயத்தில் கற்கும் மாணவர்களும் இதன்போது இரையாகினர். கரைக்கு வந்துசேர சுமார் 50 மீற்றர் இருக்கும்போதே படகு கவிழ்ந்துள்ளது. இதனால் அன்றைய நாள் கிண்ணியாவை மட்டுமல்ல, முழு நாட்டையும் சோகத்தில் ஆழ்த்தியது. 20க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்து உள, உடல் ரீதியாக பாதிக்கப்பட்டார்கள். ஒரே குடும்பத்தை சேர்ந்த இரு மாணவிகள், கர்ப்பிணித் தாய், மகள், மகன் என எட்டு உயிர்கள் பலியாகின. ஆனாலும், பாலப் புனரமைப்பு என்ற போர்வையில் புனரமைப்பு கைவிடப்பட்டு, இடிந்து விழும் நிலையில் அதன் வழியூடாக பொதுமக்கள் போக்குவரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

தற்போதைய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் நெடுஞ்சாலை அமைச்சுக்காக 373 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதாக கூறப்பட்டாலும், இப்பாலத்தின் புனரமைப்புக்காக நிதி ஒதுக்கப்படவில்லை.

இப்பாலம் ஊடாக பாடசாலை மாணவர்கள் பொதுமக்கள் எனப் பலர் நாளாந்தம் பயணிக்கிறார்கள். ஆனாலும், மக்களுடைய கனவு கனவாகவே செல்கிறது. புனரமைப்பு என்ற போர்வையில் கோட்டாபய காலத்தில் அரசியல்வாதிகளால் அடிக்கல் நடப்பட்டது. ஆனால், அது வெற்றியளிக்கவில்லை, நல்லாட்சி அரசில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோதும் அடிக்கல் நடப்பட்டது. அதுவும் கைகூடவில்லை. இவ்வாறாக ஏமாற்றப்பட்ட மக்கள் தற்போது இயந்திரப் படகு மூலமான விபத்துக்கு முகங்கொடுத்த நிலையில், தங்களைத் தாங்களே ஆற்றுப்படுத்திக் கொண்டிருக்கும் மக்களுக்கு எப்போது தீர்வு கிட்டும் ?

“வழமையாக நான்தான் பாடசாலைக்கு கூட்டிச் செல்வேன். ஆனால், அன்றைய தினம் எனது இரு மகள்களையும் பாடசாலை செல்வதற்காக படகுவரை கூட்டிச் சென்று விட்டுவிட்டு வ்ந்தேன். பிறகு ஐந்து நிமிடங்கள் கூட இல்லை. இந்த சம்பவத்தைக் கேள்விப்பட்டு பாடசாலைக்குச் சென்றேன். உடனடியாக ஆசிரியர் ஒருவர் கிண்ணியா வைத்தியசாலைக்கு செல்லுமாறு கூறினார். அங்கு சென்றால் இளைய மகள் ஜனாசாவாக இருந்தார். பிறகு மூத்த மகளை தேடியபோது வாயில் நுரை வெளியேற உயிருக்காகப் போராடிய நிலையில் அவரையும் இறைவன் தன் பக்கம் அழைத்துக் கொண்டான்” என இயந்திரப் படகு கவிழ்ந்ததில் இரு மகள்களை இழந்த என்.சுஜானா வயது (32) தனது கவலையை வெளிப்படுத்தினார்.

இப்படியாக கர்ப்பிணித் தாய் மட்டுமல்ல, அப்பாவி இளம் பிஞ்சு மாணவர்களும் இரையாகினர். குறித்த பாலம் புனரமைப்புக்காக மூடப்பட்டுள்ளது எனப் போடப்பட்ட போலிப் பதாகை அகற்றப்பட்டு மக்கள் அவ்வழி ஊடாக பயணிக்கிறார்கள். எனவே, “இந்தப் பாலம் எந்த நேரத்திலும் இடிந்து விழலாம். இதன் ஊடாக பயணிப்பது தடை செய்யப்பட்டுள்ளது” என வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கிண்ணியா பொலிஸார் இணைந்து விழிப்புணர்வு பதாகை மூலம் காட்சிப்படுத்தியுள்ளனர்.

ஆனாலும், மக்கள் அதன் மூலம் மீண்டும் பயணிக்கிறார்கள். மீண்டும் ஓர் அபாயகரமான சம்பவம் இடம்பெற்று விடக்கூடாது என்பதே பலரின் எதிர்பார்ப்பாகும். இப்படகு விபத்தின் போது உயிரிழந்தவர்களுக்கான நீதியான நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும், இந்தப் பாலம் புனரமைக்கப்பட வேண்டும் என்பதே மக்களது எதிர்பார்ப்பாகும்.

“இந்த குறிஞ்சாக்கேணி பாலம் புனரமைக்கப்படாமை வேதனையளிக்கிறது. இதன் ஊடாக பாடசாலை மாணவர்கள் உட்பட பலர் தற்போது பயணிக்கிறார்கள். மீண்டும் ஒரு விபத்து இடம்பெறாமல் இந்தப் பாலத்தை உடனடியாகப் புனரமைத்து தருமாறு மக்கள் சார்பாக கோரிக்கை விடுக்கின்றேன்” என கிண்ணியா பொதுமகன் றமீஸ் உபை தெரிவித்தார். கிண்ணியா மக்கள் பல வருட காலமாக ஏமாற்றப்பட்டே வருகிறார்கள். முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன ஜனாதிபதி தேர்தலின் போது கிண்ணியாவில் இடம்பெற்ற கூட்டத்தின்போது கொடுத்த வாக்குறுதியை நிறைவேறவில்லை. ஆனாலும், அவர் ஜனாதிபதியாகி பதவிக் காலம் முடியும் வரை ஆட்சி செய்தார். குறிஞ்சாக்கேணிப் பாலம் புனரமைக்கப்படவில்லை. இன்னும் இன்னும் மக்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்காமல் இப்பாலத்தை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.





# இலங்கை வந்தடைந்த ஆப்கான் கிரிக்கெட் அணி




இலங்கை அணியுடன் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரில் பங்கேற்பதற்காக ஆப்கானிஸ்தான் அணி நேற்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக இலங்கையை வந்தடைந்தது. ஹஸ்மத்துல்லாஹ் ஷாஹிதி தலைமையிலான ஆப்கானிஸ்தான் அணியின் 18 பேர் கொண்ட குழாம் இவ்வாறு இலங்கையை வந்தடைந்தது. ஐ.சி.சி. உலகக்கிண்ண சுப்பர் லீக் தொடரின் ஒரு பகுதியாக ஆப்கானிஸ்தான் அணியுடனான குறித்த தொடர் அமைந்திருக்கிறது.

2023ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண சுப்பர் லீக் தொடரில் இதுவரை 18 போட்டிகளில் விளையாடியுள்ள இலங்கை அணி 62 புள்ளிகளுடன் 10ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. ஆப்கானிஸ்தானுக்கு எதிரான 3 போட்டிகள் உள்ள நிலையில், இலங்கைக்கு இன்னும் 6 போட்டிகள் மட்டுமே உள்ளன.

இந்தப் புள்ளிப் பட்டியலில் முதல் 8 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரில் பிரதான குழுவிற்கு நேரடியாகத் தகுதி பெறும். மற்ற அணிகள் தகுதிச் சுற்றுப் போட்டியில் பங்கேற்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com



# இஸ்ரேலிய ஊடகங்களைப் புறக்கணிக்கும் அரேபியர்கள்

மத்திய கிழக்கில் நடக்கும் முதல் பீபா உலகக் கிண்ணப் போட்டியில் செய்திகளைச் சேகரிக்கும் இஸ்ரேலிய ஊடகங்களை அரேபிய ரசிகர்கள் புறக்கணித்து வருகின்றனர். அரேபிய ரசிகர்களை இஸ்ரேலிய ஊடகங்கள் நேர்காணல் செய்ய முயற்சி செய்யும்போது அவர்கள் விலகிச் செல்கின்றனர்.

இதன்போது இஸ்ரேலிய பொது ஒளிபரப்பு நிறுவனத் தொலைக்காட்சியின் நிருபர்கள் தாங்கள் பெரும்பாலும் ஏமாற்றப்பட்டதாகக் கூறினர். இரண்டு சவூதி ரசிகர்கள், ஒரு கத்தார் கடைக்காரர், மூன்று லெபனான் ரசிகர்கள் ஆகியோர் இஸ்ரேலிய நிருபர்களிடம் இருந்து விலகிச் செல்வதை நேரடி ஒளிபரப்புக் காட்சிகள் சுட்டிக்காட்டின. ஒரு நிருபர் கூறுகையில், பாலஸ்தீன ரசிகர்கள் கொடிகளை அசைத்து, “வீட்டிற்குச் செல்லுங்கள்” என்று கோஷமிட்டனர் என்றார். கட்டார், இஸ்ரேலை அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கவில்லை. ஆனால், உலகக் கிண்ணப் போட்டிக்காக இஸ்ரேலின் டெல் அவிவ் நகரிலிருந்து நேரடி விமானங்களைக் கையாள இஸ்ரேலிய தூதர்கள் குழுவைக் கட்டார் அனுமதித்துள்ளது. இதேவேளை 10 ஆயிரம் முதல் 20 ஆயிரம் இஸ்ரேலிய உதைபந்தாட்ட ரசிகர்கள் கட்டாருக்குச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இன்றைய போட்டிகள்

மொராக்கோ VS குரேஷியா (குழு-F) - மாலை 3.30

ஜேர்மனி VS ஜப்பான் (குழு-E) - மாலை 6.30

ஸ்பெயின் VS கொஸ்டாரிகா (குழு-E) - இரவு 9.30

பெல்ஜியம் VS கனடா (குழு-F) - நள்ளிரவு - 12.30

FIFA WORLD CUP Qatar2022

# ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த ஈரான் அணியினர்



ஹிஜாப் உடைக்கு எதிராக ஈரான் முழுவதும் பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்ற நிலையில், அதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் பீபா உலகக்கிண்ணத்தில் பங்கேற்ற ஈரான் அணியினர் ஆரம்பப் போட்டியின்போது தேசிய கீதத்தை பாடாமல் நின்றனர்.

ஹிஜாப் உடைக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது கடந்த செப்டெம்பர் மாதம் 17ஆம் திகதி மாஷா அமினி (22 வயது) என்ற இளம்பெண் மரணமடைந்ததைத் தொடர்ந்து போராட்டம் வலுவடைந்தது. பல்வேறு நகரங்களில் நடந்துவரும் போராட்டங்களால் ஈரான் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டக்காரர்களை ஒடுக்க ஈரான் அரசு கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற இங்கிலாந்து - ஈரான் அணிகளுக்கிடையிலான போட்டி ஆரம்பமாவதற்கு சற்று முன்னர் இரண்டு நாடுகளினதும் தேசிய கீதங்கள் இசைக்கப்பட்டன.

இதில் ஈரானின் தேசிய கீதம் இசைக்கப்பட்ட போது அந்நாட்டு வீரர்கள் யாரும் தேசிய கீதத்தை பாடாமல் மௌனம் சாதித்து ஹிஜாப் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு தமது ஆதரவை வெளியிட்டனர்.

# களுவாஞ்சிக்குடி மெக்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியன்



(நிந்தவூர் நிருபர்)

எருவில் கண்ணகி விளையாட்டுக் கழகம் நடத்திய 8 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் களுவாஞ்சிக்குடி மெக்ஸ் விளையாட்டுக் கழகம் இவ்வருட சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டு சம்பியன் கிண்ணத்தையும் ரூ.15,000 பணப்பரிசையும் பெற்றுக்கொண்டது. இக்கழகம் இவ்வருடம் பெற்றுக் கொண்ட 12ஆவது சம்பியன் கிண்ணம் இதுவாகும்.

முதலில் துடுப்பெடுத்தாடிய றொபின் விளையாட்டுக் கழகம் 8 ஓவர்களில் 6 விக்கட்டுகளை இழந்து 48 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய களுவாஞ்சிக்குடி மெக்ஸ் விளையாட்டுக் கழகம் 7.3 ஓவர்களில் 6 விக்கட்டுக்களை இழந்து 49 ஓட்டங்களைப் பெற்று சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

இக்கழகம் முதலாவது போட்டியில் திருவள்ளுவர் விளையாட்டுக் கழகத்தை 7 விக்கட்டுகளினாலும் இரண்டாவது போட்டியில் உதயா விளையாட்டுக் கழகத்தை 8 விக்கட்டுகளினாலும் காலிறுதிப் போட்டியில் காரைதீவு விளையாட்டுக் கழகத்தை 9 விக்கட்டுகளினாலும் அரையிறுதிப் போட்டியில் காமெலியன் விளையாட்டுக் கழகத்தை 5 விக்கட்டுகளினாலும் வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 18.7 மில்லியன் ரூபா செலவில் கடந்த வருடம் புனரமைக்கப்பட்ட கல்முனை பஸ் நிலையம்

## சேதமடைந்து கீழே விழும் நிலையில் கூரை



(நிந்தவூர் நிருபர்)

கல்முனை பிரதான பஸ் நிலையத்தின் கூரை சேதமடைந்து எந்த நேரமும் கீழே விழக்கூடிய நிலையில் காணப்படுவதாக பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கல்முனை பிரதான பஸ் நிலையத்திலிருந்து தினசரி நாட்டின் பல இடங்களுக்கும் பஸ்கள் பயணிக்கின்ற நிலையில், பஸ் நிலையத்தின் கூரை இவ்வாறு சேதமடைந்திருப்பது பலரது விசனத்திற்கும் உள்ளாகியுள்ளது.

கடலோர பாதுகாப்பு, கழிவுப்பொருள் அகற்றல் மற்றும் சமுதாய தூய்மையாக்கல் இராஜாங்க அமைச்சால் நாட்டிலுள்ள 100 நகரங்களை செழிமைமிக்க நகரங்களாக அழகுபடுத்தும் திட்டத்தின்கீழ் கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் 18.7 மில்லியன் ரூபா செலவில் கல்முனை பஸ் நிலையம் நகர அபிவிருத்தி அதிகாரசபையாலும் கல்முனை மாநகர சபையாலும் புனர்நிர்மாணம் செய்யப் பட்டது.

இருந்தும் இவ்வாறு கட்டட கூரை சேதமடைந் திருப்பது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்துமாறு பயணிகள் கேட்டுள்ளனர்.

# மட்டக்களப்பு கிரான் தரவை மாவீரர் துயிலும் இல்ல கல்லறைகள் அழிப்பு





(வாழைச்சேனை நிருபர்)

எங்களது இனத்தின் தேச விடுதலைக்காக தங்களது இன்னுயிரை ஆகுதியாக்கிய அத்தனை மாவீரர் செல்வங்களையும் இங்கே விதைத்து அவர்களது கல்லறைக் கற்களை வழிபடுகின்ற தழிழருடைய வழிபாட்டில் அவர்களுடைய தியாகங்களை மதிக்கின்ற - போற்றுகின்ற வரலாற்றை சிங்கள - பௌத்த ஸ்ரீலங்கா பேரினவாத அரசு அழித்து ஒழித்திருக்கிறது - என்று பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் இணைப்பாளர் தவத்திரு வேலன் சுவாமிகள் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கிரான் தரவை மாவீரர் துயிலும் இல்ல ஏற்பாட்டுக் குழுவினர் விடுத்த வேண்டுகோளை அடுத்து அவ்விடத்திற்கு நேற்று முன்தினம் (21) மாலை நேரில் சென்று துயிலும் இல்ல பிரதேசத்தைச் சுற்றி பார்வையிட்டு, அங்கிருந்த கல்லறைகள் அழிக்கப்பட்டிருந்ததை கண்டு கவலையுற்று அது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழத்தில் இருக்கின்ற அத்தனை மாவீரர் துயிலும் இல்லங்களையும் இடித்து நொறுக்கித் தள்ளி எங்களது உறவுகள் தங்களது உறவுகளை நினைந்து நினைவேந்தல்களைக்கூட செய்யமுடியாதவாறு வரலாறு முழுமையாக அழித்திருக்கக்கூடிய விடயமானது எங்களது நெஞ்சுக்கு மேலே ஏறிநின்று எங்களை அழித்ததற்கு ஒப்பானதாக இருக்கிறது. பல்லாயிரக்கணக்கான மாவீரர் செல்வங் களுடைய வித்துடல்களை தாங்கி நிற்கின்ற தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் நிற்கும்போது இருக்கின்ற உணர்வு வார்த்தைகளாலே வெளிப்படுத்த முடியாது.

அப்படியான சூழ்நிலையிலேயே தரவை மாவீரர் துயிலும் இல்லம் சிரமதானப் பணிகளை மட்டக்களப்பு மாவட்ட தரவை மாவீரர் துயிலும் இல்ல ஏற்பாட்டுக் குழுவினர் மற்றும் பெற்றோர்கள் எந்தவித கட்சி அரசியல் கலப்பும் இல்லாமல் செய்து வருகின்றனர்.

தமிழீழம் எங்கும் இருக்கக்கூடிய அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்களுக்கும் ஏற்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டு மாவீரர்களின் பெற்றோர்கள் பொதுமக்கள் அனைவரும் இந்த மாவீரர் துயிலும் இல்ல சிரமதானப் பணிகளை மேற்கொண்டு எதிர்வரும் கார்த்திகை 27இல் மாவீரர் நாளை அனுஷ்டிக்க இருக்கின்றார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அரசியல் கட்சிகள் தங்களுடைய கட்சி அரசியலுக்காக இந்த மாவீரர் செல்வங்களின் தியாகங்களை பயன்படுத்த வேண்டாம் என்று அன்புரிமையுடன் கேட்டு நிற்கின்றோம். மாவீரர்களது பெற்றோர்கள் பொதுமக்களுக்கு வழிவிட்டு அவர்கள் இந்த ஏற்பாடுகளை சிறப்பாக செய்யும் பொருட்டு அது சிறப்பாக அமையும் என்ற அடிப்படையிலேயே எதிர்வரும் கார்த்திகை 27இல் இங்கு மாவீரர் நினைவு நாள் இடம்பெறவுள்ளது.

நீண்டகால இடைவெளியின் பின்னர் மீண்டும் இம்முறை தமிழீழமெங்கும் மாவீரர் நாள் மிகவும் தேசிய எழுச்சியாக அனைத்து துயிலும் இல்லங்களிலும் நடைபெறவிருக்கிறது. அன்றைய தினம் அனைவரும் வந்து வழிபாடுகளை ஆற்றவேண்டும். வீரமறவர்களுக்கு எங்களுடைய வீர வணக்கத்தினை செலுத்த வேண்டும். அவர்களுடைய தியாகங்கள் எந்த இலட்சியத்திற்காக நடைபெற்றதோ அதே இலட்சியத்திலே எந்தவித விட்டுக் கொடுப்பும் இல்லாமல் தமிழர்களுக்கென்று ஒரு தனியான ஒரு தேசம் அமைய வேண்டும், சுயநிர்ணய உரிமையோடு வாழ வேண்டும் என்ற அதே இலட்சியத்திலே நாம் அனைவரும் பயணிக்கவேண்டும். தமிழர்களின் தாகம் தமிழீழ தாயகம் - என்றார்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையம் ஐந்து தேசிய விருதுகள் பெற்று சாதனை



(அக்கரைப்பற்று நிருபர்)

புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் கடந்த 2019 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் நாடளாவிய ரீதியிலுள்ள கலாசார மத்திய நிலையங்களுக்கிடையில் நடத்தப்பட்ட பிரதீபா சங்கீத, நடனப் போட்டிகளில் கலந்து கொண்டு தேசிய ரீதியில் வெற்றிபெற்றவர் களுக்கான விருது வழங்கும் விழா புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தலைமையில் கொழும்பு எல்பிஸ்டன் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் கலாசார மத்திய நிலையம் 2019ஆம் ஆண்டில் முஸ்லிம் கிராமிய நடனம் குழு – (றபான்), புதிய படைப்பாக்க பாடல் குழு, கிராமிய பாடல் குழு – (சிரேஷ்டம்), கிராமிய பாடல் குழு – (கனிஷ்டம்) ஆகிய 4 போட்டிகளில் முதலிடம் பெற்று 4 தேசிய விருதுகளையும், 2021ஆம் ஆண்டில் முஸ்லிம் கிராமிய நடனம் - (றபான் மற்றும் பொல்லடி) நிகழ்ச்சியில் முதலிடம் பெற்று ஒரு தேசிய விருதையும் பெற்று மொத்தமாக அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் கலாசார மத்திய நிலையம் 5 தேசிய விருதுகளை பெற்றுக்கொண்டுள்ளது.

தேசிய ரீதியில் சாதனை படைக்க அயராது பாடுபட்ட அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி ஐ.எல்.றிஸ்வான், பயிற்சிகளை வழங்கிய வளவாளர்கள் அனைவருக்கும் அக்கரைப்பற்று பிரதேச செயலகம் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது.

## போடியார் புலம்பல்!



**அமரிக்காவுக்கு போன மகிந்தட தம்பி பசீல் ராஷபக்ச நாடு திரும்பி வந்துத்தாராம் எண்டு கும்மாளம் அடிக்கிறாங்க எலுவா மொட்டுக்கட்சி எம் பிமார்கள் .!**

**என்னடா சந்திர மண்டலத்துக்கு போய் திரும்பிவந்தவர் மாதிரி கூத்துக்காட்டிறயள் அவரு வந்தா என்ன நாட்டில் பஞ்சம் பசி தீர்ந்து பாலாறு ஓடப்போகுதா?**

**நரியின் குழிபறிப்புக்குத்தான் இந்த காகம் ஒத்துவாராது அவ்வளவுதான் வேற ஒண்டும் நடக்கா..**

# கேரள கஞ்சாவுடன் சந்தேக நபர் கைது

(பாறுக் ஷிஹான்)

250 கிராம் கேரள கஞ்சாவைக் கடத்திய சந்தேகநபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

விசேட அதிரடிப்படை புலனாய்வுப் பிரிவினரின் தகவலுக்கமைய நேற்று முன்தினம் இரவு அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் இக்கைது இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் சம்மாந்துறை பொலிஸ் எல்லைக்குட்பட்ட வீரமுனை பகுதியைச் சேர்ந்த 52 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன், மேற்குறித்த போதைப்பொருளை கடத்திச் செல்வதற்காக தயாராக இருந்தவேளை சந்தேக நபர் கைதானார்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடமிருந்து 250 கிராம் பொதிசெய்யப்பட்ட கேரள கஞ்சா விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நடவடிக்கையானது விசேட அதிரடிப் படையின் கட்டளை அதிகாரி பிரதி பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக் கமைய அம்பாறை வலயக் கட்டளை அதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சில்வெஸ்டர் விஜேசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டி.சி.வேவிடவிதான ஆகியோரின் வழிகாட்டலில்



கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்க தலைமையிலான உப பொலிஸ் பரிசோதகர்களான எச்.ஜி.பி.கே நிஸ்ஸங்க உள்ளிட்ட பொலிஸ் சார்ஜன்ட் பண்டார (13443), பொலிஸ் கான்ஸ்டபிள்களான நிமேஸ் (90699), அபேரட்ன (75812), சிந்தக (75492), வாகனச்சாரதி டபிள்யு.எம்.குணபால (19401), அதிகாரிகள் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் இணைந்தே இந்நடவடிக்கையை முன்னெடுத்து சந்தேக நபரை கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபர் சான்றுப் பொருட் களுடன் சம்மாந்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் விசேட அதிரடிப் படையினர் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# வயலுக்குள் ஆடு மேய்ந்ததால் திருமலையில் மண்வெட்டி தாக்குதல்

## காயங்களுடன் ஒருவர் வைத்தியசாலையில்

(அப்துல்சலாம் யாசீம்)

ஆட்டை வயலுக்குள் அனுப்பவேண்டாம் எனக் கூறியவருக்கு மண்வெட்டியால் தாக்குதல் நடத்திய சம்பவமொன்று திருகோணமலை நொச்சிக்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வயலுக்குள் ஆடு மேய்ந்துகொண்டிருந்த நிலையில், நேற்று முன்தினம் (21) மாலை 4.30 மணியளவில் ஆட்டு உரிமையாளருக்கு ஆட்டை தன்னுடைய வயலுக்குள் அனுப்ப வேண்டாமென வயல் உரிமையாளர் கூறிய போது ஆட்டு உரிமையாளர் மண்வெட்டியால் தாக்குதல் நடத்தியதாகவும் திருகோணமலை பொது வைத்தியசாலை பொலிஸாரிடம் பாதிக்கப்பட்ட நபர் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

குறித்த நபர் கை உடைந்த நிலையில், மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டபோது அங்கு பெறப்பட்ட XRAY மூலம் கை உடைந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளானவர் நொச்சிக்குளம், சாந்திபுரம் பகுதியைச் சேர்ந்த வேலாயுதம் ராஜேந்திரன் (65 வயது) என பொலிஸார் தெரிவித்தனர்.

மண்வெட்டியால் தாக்குதல் நடத்திய குறித்த சந்தேகநபர் தலைமறைவாகியுள்ள நிலையில், மொரவெவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தேவையானவர்கள் எடுத்துச் செல்லுங்கள்: இயலுமானவர்கள் வைத்துச் செல்லுங்கள்!

## மட்டு. மாவட்டத்தில் பொது இடங்களில் உணவுப் பெட்டிகள்



(கல்குடா நிருபர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் உணவுப் பொருட்களை 'தேவையானவர்கள் எடுத்துச் செல்லுங்கள், இயலுமானவர்கள் வைத்துச் செல்லுங்கள்' என்ற திட்டத்தில் ரெசிலியன்ஸ் அமைப்பினால் பல்வேறு வேலைத்திட்டங்கள் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வருகின்றன.

தேவையானவர்கள் எடுத்துச் செல்லுங்கள், இயலுமானவர்கள் வைத்துச் செல்லுங்கள் என்ற திட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று, ஓட்டமாவடி மற்றும் கோறளைப்பற்று மத்தி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் உணவுகள் வைப்பதற்கான பெட்டிகள் உணவுகளுடன் கையளிக்கும் நிகழ்வு நேற்று (22) இடம்பெற்றது.

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலை, வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயம், செம்மண்ணோடை அல் ஹம்ரா வித்தியாலயம், ஓட்டமாவடி பஸ் தரிப்பு நிலையம் என்பற்றில் உணவு வைக்கப்பட்ட பெட்டிகள் வைக்கப்பட்டன.

இதில் பாடசாலைகளில் வைக்கப்பட்ட பெட்டிகளில் பிஸ்கட், பால் பக்கட்டுகள்



வைக்கப்பட்டதுடன், பொது இடங்களில் வைக்கப்பட்ட பெட்டியில் பிஸ்கட், பருப்பு, கோதுமை மா, சமபோச போன்ற பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன.

இப்பொருட்கள் தேவையான எவரும் தங்களது தேவைக்கேற்ப எடுத்துக்கொள்வதுடன், வசதி படைத்தவர்கள் தங்களாலான பொருட்களை இதில் வைத்துச் செல்லலாம் என்று இத்திட்டத்தின் இணைப்பாளர் எம்.எச்.எம்.அம்ராஸ் அலி தெரிவித்தார்.

இத்திட்டம் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு ரெசிலியன்ஸ் அமைப்பின் பணிப்பாளர் டாக்டர் நெவில் விஜயசேகரவின் வழிகாட்டலில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக இத்திட்டத் தின் இணைப்பாளர் எம்.எச்.எம்.அம்ராஸ் அலி தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில் பிரதேச இளைஞர் சேவை மன்ற அதிகாரி, பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கப் பிரதிநிதிகள், வைத்தியசாலை நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



# கிழக்கு மாகாண நுண்கலை இளம் கலைஞர் விருது முரளிதரனுக்கு





(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்கு மாகாண பண்டாட் டலுவல்கள் திணைக்களத்தினால் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 2020 மற்றும் 2021ஆம் ஆண்டிற்கான கலைஞர்களை கௌரவித்து விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.

இதன்போது சிற்பக்கலையில் காத்திரமான பங்களிப்பை வழங்கியமைக்காகவும், பல்வேறு சாதனைகள் புரிந்தமைக்காகவும் மட்டக்களப்பைச் சேர்ந்த பரமசிவம் முரளிதரன் என்பவர் 2021ஆம் ஆண்டிற்கான நுண்கலை இளங்கலைஞர் (சிற்பம்) எனும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவர் 1999ஆம் ஆண்டு சிற்பத்துறையில் தேசிய ரீதியில் இரண்டு தங்கப் பதக்கங்களை வென்றிருப்பதுடன், நுண்கலை படைப்புகள் தொடர்பாக பல்வேறு விருதுகளும், கௌரவங்களும் பெற்றிருக்கிறார்.

மரம், மெழுகு மற்றும் சீமெந்து சிற்பங்களில் ஈடுபாடுடைய இவர், மட்டக்களப்பு நகரத்தில் அமைக்கப்பட்டுள்ள சாரண மாணவர் சிற்பம், வண. வில்லியம் ஓல்ட் அடிகளாரின் சிற்பம் உட்பட பல்வேறு சிற்பங்களைப் படைத்துள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனமொன்றின் உயர் பதவியில் இருந்தாலும், கலைத்துறையிலும் மிகுந்த ஈடுபாடுகொண்ட இவர், ஓவியம், இலக்கியம் மற்றும் சினிமா ஆகிய துறையிலும் தனது பங்களிப்பை வழங்கி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழாய்வு உலகில் பிரகாசித்த சுடரொளி
# தமிழறிஞர் அவ்வை நடராசன் காலமானார்

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், செம்மொழி நிறுவனத்தின் முன்னாள் துணைத் தலைவருமான மூத்த தமிழறிஞர் அவ்வை நடராசன் உடல்நலக்குறைவு மற்றும் வயது மூப்பு காரணமாக தனது 86ஆவது வயதில் காலமானார்.

கடந்த சில நாட்களாக உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த அவர், சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றுவந்த நிலையில், திங்கட்கிழமை மாலை காலமானார்.

''தமிழ் அன்னையும் தேம்பி அழும் இழப்பு'' என அவ்வை நடராசன் மறைவு குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார். இதுகுறித்து முதலமைச்சர் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில்,

''தமிழாய்ந்த தமிழறிஞர் அவ்வை நடராசன் நம்மைவிட்டுப் பிரிந்தார் எனும் துயர்மிகு செய்தியால் வாடி நிற்கிறோம். தமிழுள்ள வரை அவரது புகழ் நம்மிடையே நிலைத்து நிற்கும்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை, அண்ணா நகரிலுள்ள இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த மறைந்த தமிழறிஞர் அவ்வை நடராசனின் உடலுக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள், அறிஞர்கள், திரைத்துறை பிரபலங்கள் உள்ளிட்டோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.


இதேவேளை, பெருந்தகை அவ்வை நடராசனின் தமிழ்ப் பணிகளை கௌரவிக்கும் வகையில் காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்த தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

''தமிழாய்வு உலகில் பிரகாசித்துவந்த ஒரு சுடரொளி மறைந்துவிட்டது'' என அவ்வை நடராசன் மறைவுக்கு இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முத்தரசன் இரங்கல் தெரிவித்துள்ளார். சர்வதேச தமிழ் ஆய்வு அமைப்புகளில் பொறுப்பேற்று தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும் பெருமை சேர்த்தவர் அவ்வை நடராசன் எனவும் முத்தரசன் புகழாரம் சூட்டியுள்ளார்.

அவ்வை நடராசன் மிகச் சிறந்த தமிழறிஞர், சிந்தனையாளர், பேச்சாளர். தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர். இவர் திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில் 1936ஆம் ஆண்டு ஏப்ரல் 24ஆம் திகதி பிறந்தார்.

மதுரை தியாகராசர் கல்லூரியில் படித்து, தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றார். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் "சங்க இலக்கியத்தில் பெயரிடு மரபு" என்னும் பொருளில் ஆய்வுசெய்து 1958இல் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றார். அதன் பின்னர் "சங்க காலப் புலமைச் செவ்வியர்" என்னும் பொருளில் ஆய்வுசெய்து முனைவர் பட்டம் பெற்றார்.





மதுரையிலுள்ள தியாகராசர் கல்லூரி, தஞ்சாவூரிலுள்ள மன்னர் சரபோஜி அரச கல்லூரி ஆகியவற்றில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார். இதன்பின்னர், புதுடில்லியிலுள்ள அகில இந்திய வானொலி நிலையத்தில் செய்தி வாசிப்பாளர், அறிவிப்பாளராக பணியாற்றினார்.

இதன்பிறகு அவ்வை நடராசன், தலைமைச் செயலகத்தில் மொழிபெயர்ப்புத்துறை இயக்குநராக பணியாற்றினார். பின்னர் 1984 முதல் 1992 வரை தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத்துறைச் செயலாளராகப் பணியாற்றினார். இந்திய ஆட்சிப் பணி அதிகாரியாக இல்லாமல் தமிழக அரச துறைச் செயலாளராக நியமிக்கப்பட்டவர் இவர் ஒருவர்தான். இதுதவிர, பல்வேறு பொறுப்புகளை வகித்தார்.


தமிழக அரசின் கலைமாமணி விருது, பேரறிஞர் அண்ணா விருது, மத்திய அரசின் பத்ம விருது உள்ளிட்ட விருதுகளைப் பெற்றுள்ளார். வாழ்விக்க வந்த வள்ளலார், பேரறிஞர் அண்ணா, கம்பர் காட்சி, பாரதி பல்சுவை, கம்பர் விருந்து, திருப்பாவை விளக்கம் உட்பட பல்வேறு படைப்புகளை வழங்கினார்.

அவ்வை நடராசன் பெயரில் சென்னை தரமணியிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அறக்கட்டளை நிறுவப்பெற்று ஆண்டுதோறும் அவரது மேடைத் தமிழ் தொடர்பான உரை நிகழ்வுகள் நடைபெறுகின்றன. அவ்வை நடராசன் முன்னாள் தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி அமைத்த ஐம்பெருங் குழுவின் உறுப்பினராவார். இலங்கை, அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, ஜேர்மனி, சிங்கப்பூர், மலேசியா, ரோம் உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்குச் சென்றுள்ளார்.


தமிழறிஞர் அவ்வை நடராசனின் மனைவியும் குழந்தை நல மருத்துவருமான தாரா நடராசன் 2020ஆம் ஆண்டு காலமானார். அவ்வை நடராசன் - தாரா நடராசன் தம்பதிக்கு தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் ந.அருள், மருத்துவர் கண்ணன் (அவுஸ்திரேலியா), மருத்துவர் பரதன் (தென்னாபிரிக்கா) ஆகிய மூன்று மகன்கள் உள்ளனர்.

மறைந்த அவ்வை நடராசனின் இறுதிச் சடங்குகள் நேற்று மாலை சென்னை மயிலாப்பூரில் நடைபெற்றன.

## உலக செய்திகள்



# சொலமன் தீவுகளை உலுக்கிய 7.3 ரிச்டர் சக்திவாய்ந்த நிலநடுக்கம்



சொலமன் தீவுகளிலுள்ள மலாங்கோ பகுதிக்கு தென்மேற்கே நேற்று 7.3 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதென அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சக்திவாய்ந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அங்கு சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டிருந்தது. எனினும், உயிரிழப்புகள் குறித்த தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

இந்தோனேஷியாவின் ஜாவா தீவு பகுதிகளில் நேற்றுமுன்தினம் 5.6 ரிச்டர் நிலநடுக்கம் ஏற்பட்டிருந்த நிலையில், நேற்று சொலமன் தீவுகளில் நிலநடுக்கம் பதிவாகியிருந்தது.

**இந்தோனேஷியாவில் 252 பேர் உயிரிழப்பு**

இதேவேளை, இந்தோனேஷியாவின் மேற்கு ஜாவா மாகாணத்தை உலுக்கிய நிலநடுக்கத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 252 ஆக உயர்ந்துள்ளனர். 377 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வருவதுடன் 31 பேர் காணமல்போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தோனேஷியாவின் ஜாவா தீவில் அமைந்துள்ள மேற்கு ஜாவா மாகாணத்தில் நேற்றுமுன்தினம் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. அங்குள்ள சிலாங்கூர் நகரில் பூமிக்கடியில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 5.6ஆக பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சில விநாடிகள் நீடித்த நிலநடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கியதால் பீதியடைந்த மக்கள் வீதிகளில் தஞ்சமடைந்தனர். மலைகள் சூழ்ந்த மாவட்டமான சிலாங்கூர் நகரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் அடுக்குமாடிக் குடியிருப்புகள், வணிக வளாகங்கள் என நூற்றுக்கணக்கான கட்டடங்கள் முழுவதுமாக இடிந்து தரைமட்டமாகியுள்ளன.

கட்டட இடிபாடுகளில் சிக்கியவர்களை உள்ளூர் மக்கள் உதவியுடன் அவசரகால மீட்புக் குழுவினரும், தேசிய பேரிடர் மீட்புக் குழுவினரும் இணைந்து மீட்புப் பணியை மேற்கொண்டனர்.

நிலநடுக்கத்தால் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் இந்தோனேஷியாவின் பல நகரங்கள் இருள் சூழ்ந்து காணப்படுகின்றன. இந்த நகரம் சந்தித்த மிக மோசமான நிலநடுக்கம் இதுவாகதான் இருக்கும் என்று அப்பகுதி மக்கள் கண்ணீருடன் கூறியுள்ளனர். படுகாயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க மருத்துவமனைகளில் போதிய வசதிகள் இல்லாததால் தரையில் அமர வைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் காயமடைந்தவர்கள் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை உயரக்கூடும் என்றும் அஞ்சப்படுகிறது.





# வெற்றிகரமான

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையையும் நல்லிணக்கத்தையும் பிரிவு பிரிவாக செய்யமுடியாது. அவற்றை தமிழர்களுக்குக் கொடுத்து சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இல்லாமல் செய்யமுடியாது. இரு மாணவத் தலைவர்களை நீண்டநாட்களாக தடுத்துவைத்திருப்பது உண்மையும் இல்லை, நல்லிணக்கமும் இல்லை. அரசாங்கத்தின் நீதியுணர்வு சமத்துவமானதாக இருக்கவேண்டும். சகல சமூகங்கள் மீதுமான கடப்பாட்டை அரசாங்கம் வெளிக்காட்ட வேண்டியது அவசியம்.

**தேர்தல்களை ஒத்திவைத்தல்**

ஊழல், வளங்களின் முறைகேடான ஒதுக்கீட்டை ஒழிக்கக்கூடியதும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தக்கூடியதுமான முறைமை மாற்றம் (System change) ஒன்றுக்கான போராட்ட இயக்கத்தின் கோரிக்கை பல்கலைக்கழக மாணவர்களுடன் மட்டுப்பட்ட ஒன்றல்ல. மக்கள் போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களின் வடிவில் வெளிப்படையாகக் காண்பிக்கப்படாவிட்டாலும் அந்தக் கோரிக்கை மிகவும் பரந்ததொரு தளத்தைக் கொண்டதாகும். இரு மாணவத் தலைவர்களையும் மற்றையவர்களையும் போன்று கைதுசெய்யப்பட்டு நீண்டகாலத்துக்கு தடுத்துவைக்கப்படக்கூடும் என்ற பயத்தில்தான் தாங்கள் அண்மைய போராட்ட இயக்கத்தில் தீவிரமாக பங்கேற்கவில்லை என்று மட்டக்களப்பில் சிவில் சமூக சந்திப்பொன்றில் கடந்த வாரம் மௌலவி ஒருவர் தெரிவித்தார்.

மாணவத் தலைவர்கள் நீதியற்ற முறையில் தடுத்துவைக்கப்பட்டிருப்பதற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் மிகவும் பெரியவையாக இருக்கின்றன. ஆனால், அரசாங்கம் விட்டுக்கொடுப்பதாக இல்லை என்றும் அவர் சொன்னார். இத்தகைய சூழ்நிலையில் மாற்றத்தை விரும்புகின்றபோதிலும் கைது செய்யப்படுவதை விரும்பாத மக்கள், தங்களது விருப்பங்களையும் அபிலாஷைகளையும் வெளிப்படுத்த தங்களது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்த தேர்தல்களை மாத்திரமே எதிர்பார்த்திருக்க முடியும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான விருப்பத்தையும் ஜனநாயக தகுதிப்பாடுகளையும் கொண்டிருக்கின்ற போதிலும், தற்போதைய தருணத்தில் அவர் தேர்தல்களை நடத்துவதற்கு தயக்கத்தை வெளிக்காட்டுகின்றார். இரு வகையான தேர்தல்கள் நடத்தப்படவேண்டியவையாக இருக்கின்றன. உள்ளூராட்சித் தேர்தல்களும் மாகாண சபை தேர்தல்களுமே அவை. ரணில் விக்கிரமசிங்க அதிகாரப்பதவியில் இருந்த வேளைகளில் எல்லாம் பொருளாதார மீட்சிக்கும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் முக்கியத்துவம் கொடுத்துவந்திருக்கிறார். 2002 - 2004 , 2015 - 2019 காலப்பகுதிகளில் பிரதமராக பதவியில் இருந்த இரு சந்தர்ப்பங்களிலும் தேசிய தலைவர் என்ற வகையில் அவர் இதைச் செயதிருந்தார். துரதிர்ஷ்டவசமாக அவ்விரு சந்தர்ப்பங்களிலும் அவர் அதிகாரத்தை இழந்தார். அடுத்து வந்த தேர்தல்களில் அவர் கடுமையான தோல்வியைக் கண்டார். நிதியமைச்சையும் தன்வசம் வைத்திருக்கும் ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழான தற்போதைய அரசாங்கம், சர்ச்சைக்குரிய பொருளாதார சீர்திருத்தத்தை முன்னெடுக்கிறது. சர்வதேச நிதி வழங்கும் நிறுவனங்களின் குறிப்பாக, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் பிரகாரமே இந்த சீர்திருத்தத்தை முன்னெடுக்க வேண்டியிருக்கிறது. மறுபுறத்தில் உணர்ச்சிபூர்வமான தேசிய நல்லிணக்க முயற்சிகளையும் கையாளப்போவதாகவும் அவர் சூளுரைத்திருக்கிறார். இந்த பிரச்சினையை அவர் 200 ஆம் ஆண்டு எரிமலை மீது இருப்பது போன்றதென்று வர்ணித்தார்.

இத்தகையதொரு பின்புலத்தில், தேர்தல் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதில் ஜனாதிபதி அக்கறை காட்டுகிறார். தவறான ஒரு நேரத்தில் அவர் செய்யும் இந்தக் காரியம் நியாயப்படுத்தப்படக்கூடியதல்ல. ஏற்கெனவே ஒரு வார காலத்துக்கு பின்போடப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல்கள் அடுத்த வருடம் மார்ச் மாதத்துக்கு முன்னர் நடத்தப்பட வேண்டியவையாக இருக்கின்றன. அரசாங்கம் முன்னெடுக்கும் தேர்தல் சீர்திருத்த செயன்முறைகள் மார்ச் மாதத்தையும் தாண்டி நீடிக்கக்கூடிய சாத்தியம் இருக்கிறது. மாகாண சபைத் தேர்தல்களை நடத்தவேண்டியிருந்த நேரத்தில் தேர்தல் சீர்திருத்தங்களை முன்னெடுத்த அரசாங்கத்தின் 2017 தந்திரோபாயத்தை ஒத்ததே இதுவாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமைக்கப்பட்ட மாகாண சபைகள், கடந்த நான்கு வருடங்களாக செயலிழந்து கிடக்கின்றன. அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு மக்கள் பிரதிநிதிகளினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவேண்டிய நிலையில் மாகாணங்கள், அதிகாரங்கள் கடுமையாக மத்தியமயப்படுத்தப்பட்டு ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஆளுநர்களின் நிர்வாகங்களின் கீழ் இருக்கின்றன. மாகாண சபைத் தேர்தல்கள் ஒத்திவைப்பு அதிகாரப்பரவலாக்கலை கேலிக்கூத்தாக்குகின்றன. மத்திய அரசாங்கத்தின் முகவர்களாக செயற்படும் ஆளுநர்களின் நிர்வாகம் மாகாணங்களின் மக்களின் விருப்பங்களுக்கு வழக்கம் மீறிய ஒன்றாக இருக்கிறது.

**மாறுகின்ற முன்னுரிமைகள்**

பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு வரிகள் அதிகரிப்பு, அரசாங்க செலவினங்கள் குறைப்பு, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெறுதல் என்பவற்றையும் விட வேறு பல நடவடிக்கைகளை வேண்டிநிற்கிறது. தங்களது பங்கேற்றினால் நிலைவரங்களில் மேம்பாட்டை ஏற்படுத்த முடியும் என்று மக்கள் உணரக்கூடிய ஆட்சிமுறைமையொன்று அதற்குத் தேவை. மாகாணங்களின் மக்களினால் தெரிவுசெய்யப்பட்டு மக்களுக்கு பொறுப்புக்கூறக்கூடிய - அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட கட்டமைப்புகளை உருவாக்குவதே மாகாண சபைகள் உருவாக்கப்பட்டதன் நோக்கமாகும்.

மாகாண சபைகளுக்குப் போதுமான வளங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு உகந்த முறையில் அவை செயற்பட அனுமதிக்கப்பட்டிருந்தால், தற்போதுள்ளதைபோன்று இல்லாமல், பொருளாதார நெருக்கடியை இலங்கையினால் சிறப்பாக தாக்குப்பிடித்திருக்கக்கூடியதாக இருந்திருக்கும். மாகாண சபைகளுடன் ஒப்புரவான முறையில் தேசிய பட்ஜெட்டை பகிர்ந்துகொள்வதற்குப் பதிலாக மத்திய அரசாங்கம் மிகப்பாரிய பங்கை தனக்கு ஒதுக்கியது, அதிகாரப்பரவலாக்கத்தை உறுதிசெய்வது நாடு இன்று எதிர்நோக்கியிருக்கின்ற பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சி பெறுவதற்கு தேவையான முறைமை மாற்றத்தின் ஓர் அங்கமாகும்.

இத்தகைய பின்புலத்தில் அரசாங்கம் தங்களுக்கு எதையும் செய்யவில்லை என்று உணரும் மட்டக்களப்பு சிவில் சமூகத் தலைவர்கள் தங்களது வருமானத்தையும் நுகர்வையும் அதிகரிக்க வீட்டுத்தோட்டச் செய்கை மற்றும் சுயதொழில்வாய்ப்பு திட்டங்கள் தொடர்பில் மக்களுக்கு அறிவூட்டுவது குறித்து பேசினார்கள். ஆனால், நவீன யுகத்தின் வாய்ப்புகளை அனுகூலமாகப் பயன்படுத்துவதற்குத் தேவையான தொழில்வாய்ப்பு மற்றும் சம்பாத்தியங்களுக்கு வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையினால் பெரியளவுக்கு உதவ முடியாது.

மட்டக்களப்பில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அரசாங்கத்தின் பட்ஜெட் யோசனைகள் குறித்து கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. சமுதாயத்தின் அடிமட்டங்களிலுள்ள மக்களின் பிரச்சினைகளை அரசாங்கம் புரிந்துகொண்டதாக பட்ஜெட் யோசனைகள் அமையவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனால், புதிய கொள்கைகளில் ஒன்று குறித்து கலந்துரையாடலில் திருப்தி வெளிப்படுத்தப்பட்டது. பட்ஜெட் யோசனை இல.13 பின்வருமாறு கூறுகிறது;

"அரசாங்க நிலங்களை பாராதீனப்படுத்தும் பூர்வாங்க நடவடிக்கைகள் பிரதேச செயலாளர்களின் ஊடாக பிரதேச செயலகங்களினால் முன்னெடுக்கப்பட்ட போதிலும் பின்னர் ஒரு கட்டத்தில் அத்தகைய கடமைகள் விசேட தேவைகளுக்கென்று நிறுவப்பட்ட இலங்கை மகாவலி அதிகார சபைக்கும் நிலச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கும் கூட ஒதுக்கப்பட்டன. நிலங்களை பராதீனப்படுத்துவதுடன், தொடர்புடைய பூர்வாங்க நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் வெவ்வேறு வழிகளில் கையாளப்பட்டதால் பாரபட்சமும் முறைகேடுகளும் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

"எனவே மேற்கூறப்பட்ட விசேட தேவைகள் ஏற்கெனவே நிறைவு செய்யப்பட்டதால், மகாவலி அதிகாரசபை மற்றும் நிலச்சீர்திருத்த ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற நிலங்களில் பராதீனப்படுத்தல் உட்பட சகல அரசாங்க நிலங்களின் பராதீனப்படுத்தலுடன் தொடர்புடைய பூர்வாங்க நடவடிக்கைகள் பிரதேச செயலாளர்களினால் மாத்திரம் முன்னெடுக்கப்படுவதற்கு வசதியாக அடுத்தவருடம் செயற்திட்டம் ஒன்று தயாரிக்கப்படும்."

முன்னர் மகாவலி அதிகாரசபை பொறுப்பில் இருந்தபோது நாட்டிலுள்ள பெரும்பாலான நிலங்களின் பயன்பாட்டுடன் தொடர்புடைய தீர்மானங்கள் கொழும்பிலிருந்தே மேற்கொள்ளப்பட்டன. நிலங்கள் பராதீனப்படுத்தலுடன் தொடர்புடைய தீர்மானங்கள் பிரதேச மட்டத்துக்குப் பன்முகப்படுத்தப்படுவது, நிலப்பயன்பாடு தொடர்பில் சமூக மட்டத்தில் மக்கள் தங்கள் அபிப்பிராயத்தை தெரிவிப்பதற்கான வாய்ப்பைக் கொடுக்கும். அதிகாரப்பரவலாக்கல் உணர்வுடன் முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக்கை ஊழலையும் முறைகேடாக வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படுவதையும் குறைக்க உதவமுடியும் என்பதுடன், பொறுப்புக்கூறலை மேம்படுத்தி தேசிய பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான பொது முயற்சிகளில் தங்களுக்கு உரிமையிருக்கிறது என்ற உணர்வை சகல மக்களுக்கும் கொடுக்கும்.

இந்த போட்டியற்ற மற்றும் வெளிப்படைத் தன்மையற்ற விதிமுறைகள் தொடர்பாக அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தில் விவரிக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்களாவன:

1. விலை நிர்ணயத்தில் அதிகாரிகளின் தலையீட்டால் செலவுகள் அதிகரிக்கும்.
2. சேவை வழங்குநர்கள் மற்றும் சேவை பெறுநர்கள் என தனியார் தரப்பினர் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான வாய்ப்புகளை நீக்கும்.
3. சரக்கு மற்றும் பிற செலவுகள் தொடர்பான தவறான விளக்கம் ஏற்படும்.

நாட்டின் பொருளாதாரத்திற்கு தொழில்துறை முக்கிய பங்களிப்பை வழங்குகிறது மற்றும் வர்த்தக சமநிலையை நிர்வகிக்க உதவுகிறது. 1972ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சட்டத்தின் முன்மொழியப்பட்ட திருத்தங்களை ஒழுங்குபடுத்தும் சூழலை உருவாக்குவதற்கு அரசாங்கம் உரிய பரிசீலனையை வழங்குமாறு வர்த்தக சம்மேளனங்களும் மற்றும் சங்கங்களும் கேட்டுக்கொள்கின்றன.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7